# பொருளியல்

## அபிவிருத்திக் கொள்கைகள்
## DEVELOPMENT POLICIES

அலகு - 8.2

வே. கருணாகரன்
B. A. Hons, Dip. in Ed.


1999


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார அபிவிருத்திக் கொள்கைகள்

# ECONOMIC DEVELOPMENT POLICIES











விசேடமாக இலங்கை
பற்றியது

## அலகு:-8.2

**1999**


வே. கருணாகரன்
B.A.Hon,Dip.in.Ed
ஆசிரியர்
யாழ். கனகரத்தினம் ம.ம.வி



221, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| I. | பொருளாதார வளர்ச்சிக் கொள்கைகள் | 01 |
| | - முதலீட்டு ஊக்குவிப்புக் கொள்கைகள் | 02 |
| | - வெளிநாட்டு முதலீடு | 06 |
| | - இலங்கை நடுத்தர வருமான நாடு | 15 |
| II. | தொழில் வாய்ப்புக் கொள்கைகள் | 19 |
| | - நிறைதொழில் மட்டமும் பொருளாதாரவளர்ச்சியும் | 21 |
| | - வெளிநாட்டு தொழில்வாய்ப்பு விளைவுகள் | 22 |
| III. | வறுமை ஒழிப்புக் கொள்கைகள் | 23 |
| | - சமுர்த்தித்திட்டம் | 27 |
| IV. | விவசாய அபிவிருத்திக்கொள்கைகள் | 29 |
| | அ) ஏற்றுமதி விவசாயம் | 29 |
| | ஆ) உள்நாட்டு விவசாயம் | 31 |
| V. | கைத்தொழில் அபிவிருத்திக் கொள்கைகள் | 33 |
| | அ) இறக்குமதிப் பதிலீட்டு கைத்தொழில் மயமாக்கம் | 39 |
| | ஆ) ஏற்றுமதி நோக்கிய கைத்தொழில் மயமாக்கம் | 41 |
| VI. | கிராமிய அபிவிருத்திக்கொள்கைகள் | 49 |
| | - ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்திட்டம் | 50 |
| | - கிராமியக் கொடுகடன் | 51 |
| VII. | கீழ்க்கட்டமைப்பு அபிவிருத்திக் கொள்கைகள் | 62 |
| VIII. | கட்டமைப்பு சார்சீராக்கலும் உலகமயமாக்கலும் | 68 |
| | A. கட்டமைப்புச்சார் சீராக்கல் | 68 |
| | B. தனியார் மயப்படுத்தல் | 73 |
| | C. உலகமயப்படுத்தல் | 76 |
| IX | சுதந்திரத்தின் பின்னரான அபிவிருத்திக் கொள்கையின் முக்கிய அம்சங்கள் | 83 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார அபிவிருத்திக் கொள்கைகள்
# Economic Development Policies

"**பொருளாதார அபிவிருத்தி** என்பது பொருளாதார வளர்ச்சியின் மூலம் வருமானம் அதிகரிப்பதோடு தொழிலின்மை, வறுமை, வருமான சமமின்மை என்பன குறைந்து, கல்வி சுகாதார மருத்துவ வசதி போசாக்குநிலை வீட்டுவசதி பொழுதுபோக்குவசதி என்பவற்றில் ஏற்படும் அதிகரிப்பினூடாக மக்களின் வாழ்க்கைத்தரத்தில் ஏற்படும் நிலையான முன்னேற்றத் தினைக் குறிக்கின்றது"

அபிவிருத்திக்கொள்கையின் பிரதான **நோக்கங்கள்**

1. பொருளாதார வளர்ச்சி வேகத்தை அதிகரித்தல்.
2. தொழிலின்மையைக்குறைத்தல்.
3. வறுமையைக் குறைத்தல் - வருமானச் சமமின்மையைக்குறைத்தல்

1

## பொருளாதார வளர்ச்சிக்கொள்கைகள் - முதலீட்டு ஊக்குவிப்புக் கொள்கைகள்

- பொருளாதார வளர்ச்சிவேகத்தை அதிகரித்தல் என்பது அபிவிருத்திக் கொள்கையின் **பிரதான இலக்காகும்.**
- பொருளாதார வளர்ச்சியானது **ஒப்புரவு/நீதித்தன்மை கொண்டதாக** அமையும்போதே பொருளாதார அபிவிருத்தி அடையப்படும்
- **நீதிசார்பொருளாதார வளர்ச்சிக்** கொள்கையானது பின்வரும் அம்சங்களை உள்ளடக்கியதாகும்:

1. **வருமான ஏற்றத்தாழ்வினைக் குறைக்கும்** வகையிலான வளர்ச்சி - இது வருமான அதிகரிப்பு வறியவர் பால் செலுத்தப்படுவதை வலியுறுத்து கின்றது.
2. **வேலைவாய்ப்புக்களை விரிவாக்கும்** வகையிலான வளர்ச்சி - இதுவேலையின்மை குறைக்கப்படுவதை வலியுறுத்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. **வறுமையை அகற்றக்கூடியதான வளர்ச்சி** -இது வறியவர்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்திசெய்யப்படுவதை வலியுறுத்துகின்றது.

## முதலீட்டு ஊக்குவிப்புக்கொள்கைகள்

❖ பொருளாதார **வளர்ச்சியை** ஏற்படுத்தும் முக்கிய காரணி முதலீடு

❖ முதலீட்டை உயர்த்த
A அரசமுதலீடு
B தனியார் உள்நாட்டு முதலீடு
C வெளிநாட்டு முதலீடு
என்பவற்றைப் பயன் படுத்தமுடியும்.

முதலீட்டுக்கொள்கைகளை நிர்ணயிக்கும் காரணிகள்

A அரச முதலீடு - அரச பொருளாதார நடவடிக்கைகளுக்கேற்பத் தீர்மானிக்கப் படும்.

B தனியார் முதலீடு - **இலாபத்தன்மை, பாதுகாப்புத் தன்மை** என்பவற்றால் தீர மானிக்கப்படும்

## இலங்கையின் சேமிப்பு – முதலீட்டு வீதங்கள்

| (மொ. உ. உ. இன் சதவீதமாக) | 1996 | 1998 |
|---|---|---|
| உள்நாட்டுசேமிப்புவீதம் | 15 | 19 |
| தேறிய இறக்குமதிகள் | 09 | 06 |
| முதலீட்டு வீதம் | 24 | 25 |
| தேசிய சேமிப்பு வீதம் | 19 | 23 |

இவ்அட்டவணையின்படி இலங்கையில் **உள்நாட்டுச் சேமிப்புவீதம்** ஒப்பீட்டுரீதியில் **குறைவாக** உள்ளது இதற்கான **காரணங்கள்:**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. மக்களின் குறைந்த வருமானம் அல்லது வறுமை காரணமாக **சேமிப்பு ஆற்றல்** குறைவாக இருத்தல்.

2. அரசாங்கம் அதிகளவில் சமூகநலச் செலவுகளையும், யுத்தச்செலவுகளையும் மேற்கொள்வதால் **அரச சேமிப்பை** உருவாக்கமுடியாதிருத்தல்.
அரசசேமிப்பு = அரசிறை – நடைமுறைச்செலவு

3. வர்த்தக நிறுவனங்களின் வளர்ச்சி குறைவாக இருப்பதால் **வர்த்தகசேமிப்பு** குறைவாக இருத்தல்.

## முதலீடு - (உள்நாட்டு) சேமிப்பு இடைவெளியை நிரப்புவதற்கான முறைகள்:

1. வெளிநாட்டுக் கொடைகள்
2. வெளிநாட்டுக் கடன்கள்
3. வெளிநாட்டுக் முதலீடுகள்

### முதலீட்டு வீதத்தினை அதிகரிப்பதற்கான வழிமுறைகள்

இலங்கையில் வேலைவாய்ப்புக்களை உருவாக்கவும் பொருளாதார வளர்ச்சி வீதத்தினைக் குறிப்பிடத்தக்க அளவுக்கு உயர்த்துவதற்கும், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இன்றுள்ள ஏறத்தாழ 25 சதவீதமான முதலீட்டு வீதத்தினைப் பெருமளவுக்கு அதிகரிக்க வேண்டியுள்ளது இதற்கான வழிமுறைகளாவன;

1. முதலீட்டாளருக்கு **வரிச்சலுகை, வரிவிடுமுறை** என்பவற்றை வழங்கும் **வரவுசெலவுத்திட்டக்கொள்கை**

2. வட்டிவீதம் உட்பட முதலீட்டுக்குச் சாதகமான நிதிச் சூழலை உருவாக்கும் **நாணயக்கொள்கை**

3. உற்பத்திச்செலவையும், நேரத்தையும் சிக்கனமாக்கக் கூடியவாறு உற்பத்தித் தொழிற்பாட்டை நடத்திச் செல்லத் தேவையான **கீழ்க்கட்டமைப்புக்களை** (பொதுவசதிகளை) விருத்திசெய்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. வெளிநாட்டு முதலீடுகளை உள்நாட்டிற்குப் பெற்றுக் கொள்வதற்கான வழிவகைகளை மேற் கொள்ளுதல்.

5. முதலீட்டைத் தூண்டக்கூடியதான கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்

6. உள்நாட்டுச்சேமிப்பை அதிகரிப்பதற்கான தூண்டுதல் களை வழங்குதல்

7. நேரடிக் கட்டுப்பாட்டு முறையை நீக்குதலும், முதலீட் டைப் பாதிக்கும் ஏனைய சட்டதிட்டங்களைத் தளர்த்துதலும்

8. பொருளாதார உறுதி, அரசியல் உறுதி என்பவற்றைப் பேணுதல்

## தனியார் முதலீட்டை ஊக்குவிக்கக்கூடிய கொள்கைகள்

(மேற்காட்டிய வழிமுறைகள் இதற்கும் பொருந்தும்).

9. தனிப்பட்ட முதலீட்டாளர் உள்நாட்டில் அதிக கடன் களைப் பெறும் வகையில் அரசு உள்நாட்டில் கடன் பெறுதலைக் குறைத்துக் கொள்ளுதல்

## சேமிப்பு

- பொருளாதாரத்தில் முதலீட்டுத் தொழிற்பாட்டிற்குத் தேவையானது சேமிப்பாகும்.
- சேமிப்பு மூன்று துறைகளிலிருந்து உருவாகின்றது

A. வீட்டுத்துறைச்சேமிப்பு/குடித்தனச்சேமிப்பு
B. நிறுவன சேமிப்பு/ வர்த்தக சேமிப்பு / வியாபார சேமிப்பு
C. அரச சேமிப்பு/ பொது சேமிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேமிப்பும் – முதலீடும்

- "வருமான வட்டப்பாய்ச்சலில் சேமிப்பு பொருளாதாரத்தின் ஒரு ஒழுக்காக அமைவதால் **மொத்தக் கேள்வியைக் குறைக்கின்றது**"

  - மொத்தக் கேள்வியானது மொத்தச்செலவீட்டில் தங்கியுள்ளது. சேமிப்பானது மொத்தச் செலவீட்டிலிருந்து வெளியேற்றப்படும் நிலையில் **அவ்வளவினால் முதலீடு உட்பாய்ச்சப்படாவிடில்** மொத்தக் கேள்வி குறைக்கப் படும்.

- "பொருளாதார வளர்ச்சியினை ஊக்குவிக்கும் சேமிப்பு **முதலீட்டு வளங்களைத் தருகின்றது**"

  - சேமிப்புக்களினூடாகவே முதலீடு செய்யப்படுகின்றது. அது பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத தாகும்சேமிப்புக்கள் **முதலீடாக மாற்றப்படும் போது** அம்முதலீடானது **மீண்டும் மொத்தக்கேள்வியினை அதி கரிக்கச்செய்யும்.**

## சேமிப்பை அதிகரிக்கக் கூடியவழிவகைகள்:

A. வீட்டுத்துறைச்சேமிப்பை அதிகரிக்க - **வட்டி வீதத்தை** உயர்த்த வேண்டும்.

B. நிறுவன சேமிப்பை உயர்த்துவதற்கு - **இலாப கரமான முதலீட்டு வாய்ப்புக்கள்** ஏற்படுத்தப்படல் வேண்டும்.

C. அரச சேமிப்பை அதிகரிப்பதற்கு – அரசவரவு செலவுத்திட்டத்தின் **நடைமுறைக்கணக்கில் மிகையை** உருவாக்க வேண்டும்.

## குடித்தன சேமிப்பை விருத்திசெய்வதற்கான அரசின் வழி முறைகள் :

1. சேமிப்புக்களுக்கான **வட்டிவீதத்தை** உயர்த்துதல்
2. சேமிப்பு மீதான வட்டி வருமானங்களுக்கு **வரிச்சலுகை வரிவிடுமுறை** வழங்குதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. நாடெங்கிலும் சேமிப்பு நிறுவனங்களை உருவாக்குதல்
4. புதிய சேமிப்புத்திட்டங்களையும் உருவாக்குதல்
5. ஒப்பந்த அடிப்படையிலான சேமிப்புக்களில் அதிகளவிலான நிதியைச் சேர்த்தல் உ + ம் E.P.F
6. பணவீக்கத்தை கட்டுப்படுத்தல் மூலம் குடித்தன செலவீட்டைக் குறைத்து சேமிப்பை உயர்த்தல்
7. வறியவருக்கு வழங்கும் மானியத்தில் ஒருபகுதியைச் சேமிக்கச் செய்தல்
உ + ம் : சமுர்த்திச்சேமிப்பு

**குறிப்பு:** வெளிநாட்டு முதலீடு இலங்கையில் அண்மைக்காலத்தில் முக்கியத்துவம் பெற்று வருகிறது. பரீட்சையிலும் அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. அலகு 6 இலும் அலகு 8.2 இலும் இடம் பெறுவதால் கூடியகவனம் செலுத்தவும்.

# வெளிநாட்டு முதலீடு

- **"நாடொன்றின் முதலீடானது அந்நாட்டுச்சேமிப்பின் அளவினால் வரையறுக்கப்படுவதில்லை"**
- பொருளாதார வளர்ச்சி வேகத்தை அதிகரிக்க முதலீட்டு மட்டத்தை உயர்த்த வேண்டும்.
- உள்நாட்டுச்சேமிப்பைவிடக் **கூடிய முதலீட்டைச் செய்யவேண்டுமானால்** வெளிநாட்டு முலதனம் பெறப்படவேண்டும்.
- வெளிநாட்டு மூலதனம் i) கடன் மூலமாகவோ ii) நேரடி முதலீடாகவோ

பெற்றுக்கொள்ளப்படலாம்.

## வெளிநாட்டு முதலீட்டின் வடிவங்கள்/ வகைகள்:

அ) வெளிநாட்டு நிதிசார் முதலீடு
ஆ) வெளிநாட்டு நேர் (நேரடி) முதலீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (அ) வெளிநாட்டு நிதிசார் முதலீடு (Foreign Financial Investment)

"வெளிநாட்டவர்கள் இலாப நோக்கில் உள்நாட்டு **ஆவணங்கள்** வர்த்தக நிறுவனங்கள் **பங்குகள்** போன்ற **நிதிச்சொத்துக்களில்** பணத்தை முதலீடு செய்தல் வெளிநாட்டு நிதிசார் முதலீடு எனப்படும்"

## (ஆ) வெளிநாட்டு நேர் முதலீடு (Foreign Direct Investment)

"வெளிநாட்டவர்கள் இலாப நோக்கில் உள்நாட்டில் **மூலதனப்பொருட்கள்** **காணிகள்** என்பவற்றை **ஒன்றிணைத்துப்** **பொருளாதார** முயற்சிகளை **ஆரம்பித்தல்** வெளிநாட்டு நேர் முதலீடு எனப்படும்."

❖ வெளிநாட்டு நேர் முதலீட்டுடன் இணைந்த வகையில் வெளிநாட்டு **மூலதனம்** வெளிநாட்டு **முகாமைத்துவ நுட்பங்கள், தொழிநுட்பங்கள்** என்பனவும் ஒரு நாட்டிற்குள் கொண்டு வரப்படலாம்.

**வெளிநாட்டு முதலீட்டின் அனுகூலங்கள் / நன்மைகள் / பயன்கள் / சாதகவிளைவுகள் / முக்கியத்துவம் / காரணிகள் / சார்பான வாதங்கள் / அவசியம் / பங்களிப்புக்கள்**

1) வெளிநாட்டுப்பணம் நாட்டுக்குள் கொண்டுவரப்படும் - முதலீட்டு அளவு அதிகரிக்கும்
2) சென்மதி நிலையில் பற்றாக்குறை நீங்கும் மிகை நிலை ஏற்படும் - வெளிநாட்டு சொத்து அதிகரிக்கும்.
3) உள்நாட்டு மூலப்பொருட்களின் உபயோகம் அதிகரிக்கும்.
4) தொழில்வாய்ப்புக்கள் பெருகும்.
5) உற்பத்தி இயலளவு அதிகரிக்கும் உற்பத்தி, வருமானம் அதிகரிக்கும் - பொருளாதார வளர்ச்சி ஏற்படும்.
6) புதிய வெளிநாட்டுத் தொழில்நுட்பமும், முகாமைத்துவமும் நாட்டுக்குள் கொண்டு வரப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7) பயிற்சி பெற்ற தொழிலாளர் உருவாகுதல்
8) முயற்சியாண்மைப் பற்றாக்குறை நீங்கும்.
9) வெளிநாட்டுச் சந்தைவாய்ப்புக்கள் கிடைக்கும்
10) கைத்தொழிலிற்குச் சாதகமான சூழல் ஏற்படலாம்- உற்பத்தி பன்முகப்படுத்தப்படலாம்.

## வெளிநாட்டு முதலீட்டின் பிரதிகூலங்கள் / தீமைகள் / பாதகவிளைவுகள்

1) **இலாபங்கள்** அதிகளவில் வெளிநாடுகளைச் சென்றடையும் - **சென்மதி நிலுவையின்** சேவைகள் நிலுவை பாதகமாக மாறலாம்.

2) ஏற்றுமதி இறக்குமதிப் பட்டியல்களின் பெறுமதிகளைக் குறைத்துக் காட்டுவதன்மூலம் வெளிநாட்டுச்**செலாவணி மோசடிகளில்** ஈடுபட வாய்ப்புண்டு

3) உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய நிதிவசதிகளும் முதலீட்டுவாய்ப்புகளும் வெளிநாட்டு முதலீட்டாளர்களைச் சென்றடைதல் - **உள்நாட்டுக் கைத்தொழில்கள் பாதிப்படைதல்.**

4) **பல்தேசியக் கம்பனிகள்** விருந்தோம்பும் நாட்டின் (Host Country) அரசியல் பொருளாதார நடவடிக்கைகளில் **தலையீடுகளை** மேற்கொள்ளலாம்

5) முதலீடுகளை மேற்கொள்ள வந்தநாடுகளின் தொழில் நுட்பத்தின் மீது விருந்தோம்பும் நாடுகள் **தங்கியிருக்க வேண்டியநிலை**யேற்படல்

6) இயற்கை வளங்கள் மிகையாக வழங்கப்படல்

7) உழைப்பு சுரண்டப்படல்

8) வெளிநாட்டுச் சொத்தில் ஏற்படும் அதிகரிப்பு

→ பணநிரம்பல் அதிகரிப்பு → பணவீக்க விளைவுகள் ஏற்படும்

9) உள்நாட்டுச்சேமிப்பு, முதலீடுகள் பாதிப்படையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவிக்க இலங்கை அரசுமேற்கொண்ட நடவடிக்கைகள்

இலங்கை அரசு பொருளாதாரத்தில் மொத்த முதலீட்டை உயர்த்துவதற்கு ஒரு முக்கிய வழியாக நேரடி வெளிநாட்டு முதலீட்டினைப் பெற்றுக் கொள்ளத் தீவிர முயற்சி மேற்கொள்கிறது அவ்வகையில் அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளாவன.

1) அடிப்படை அமைப்பு வசதிகளுடன் முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களை நிறுவியமை
2) இவ்வலயங்களின் அதிகாரத்தை நாடுமுழுவதிலும் அமுல்படுத்தும் நோக்காக இலங்கை முதலீட்டுச்சபை (BOI) அமைக்கப்பட்டமை.
3) வர்த்தகக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமை
4) நாணயமாற்றுவீதக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமை
5) வெளிநாட்டு முதலீட்டாளர்களினால் இறக்குமதி செய்யப்படும் மூலப்பொருள் மீதான 100% வரிவிடுதலை
6) வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஏற்றுமதிகளை ஆரம்பித்த நாள்முதல் 1 வருடத்திற்கான ஏற்றுமதி வரி விடுதலை
7) வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு 99 வருட கால நில குத்தகை உத்தரவாதம் வழங்கப்பட்டமை.
8) இவ்வாறான முதலீடுகளைப் பொறுத்தவரை தொழிற் சங்க நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டிருத்தல்.

## வெளிநாட்டு முதலீட்டிற்கு இலங்கையில் சாதகமாகவுள்ள காரணிகள்:

1) மலிவு விலையில் ஊழியக்கிடைப்பனவு
2) அரசின் தாராள பொருளாதாரக்கொள்கை
3) அரசின் இரட்டை வரி விதிப்பு நீக்கப்பட்டமை
4) தனியார் துறைக்கான வரிச்சலுகைகள்
5) தனியார் துறைக்கான பொது வசதிகளைப் பெற்றுக் கொள்ளத் தக்கவகையிலான அரச தலையீடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6) இலங்கையில் இயங்கிவருகின்ற நிறுவனங்களின் பூரண உரிமையையும் வெளிநாட்டவர்கள் பெற்றுக் கொள்வதற்கு வழிசெய்துள்ள முதலீட்டினது எல்லை நீக்கம்.

7) இலங்கையில் முதலீடு செய்பவர்களுக்கு அரசியல் பாதிப்பு ஏற்படின் நட்டஈடு வழங்குவதற்கான அரசின் கடமைப்பாடு

8) வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலகுவில் கடன்/முதல் பெற்றுக்கொள்ளத் தக்கவகையில் வெளிநாட்டு செலாவணி வங்கிப்பிரிவு அமைக்கப்பட்டுள்ளமை.

## வெளிநாட்டு முதலீட்டிற்கு இலங்கையில் பாதகமாக / தடையாக / வரையறையாகவுள்ள காரணிகள்

1) அடிப்படை வசதிகள் பூரணத்துவமற்றவை
2) அரசியல் உறுதியின்மை
3) உள்நாட்டு அமைதியின்மை
4) தொழிலாளர் போராட்டங்கள்
5) பொது விடுமுறை தினங்கள் அதிகமாகக் காணப்படல்
6) உள்நாட்டுச் சந்தை சிறியதாகக் காணப்படல்
7) ஊழியத்தின் உற்பத்தித் திறன் குறைவாக காணப்படல்

## வெளிநாட்டு முதலீட்டைப் பெற ஓர் அரசாங்கம் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள்:-

1) பொருளாதாரவன்மைப்படுத்தலை மேற்கொள்ளல் (பக்.71)
2) முதலீட்டு ஊக்குவிப்புக்களை மேற்கொள்ளல்
3) கீட்டுக்கட்டுமானங்களை மேற்கொள்ளல்
4) அரசியல் உறுதிப்பாட்டை மேற்கொள்ளல்
5) முதலீடுகள், மூலப்பொருட்கள் போன்றவற்றிற்கு வரிவிடுமுறை, வரிச்சலுகை வழங்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாட்டு முதலீட்டைப் பெற இலங்கையில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் :

1) வெ.நா.நேரடி முதலீட்டைப்பெற தீவிரமான **வர்த்தகப் பேச்சுவார்த்தையில்** ஈடுபட வேண்டும்.

2) பிராந்தியங்களுக்கிடையிலான முதலீட்டை ஊக்குவிக்கக்கூடிய ஆசிய - பசுபிக் முதலீட்டுக் கூட்டுத் தாபனம் போன்று **ஆசிய நாடுகளும் ஒரு முதலீட்டு அமைப்பை** விருத்திசெய்ய வேண்டும்.

3) தொலைத்தொடர்பு, தெருக்கள், மின்சாரம், கல்வி போன்ற **உட்கட்டமைப்பு வசதிகளை** விருத்தி செய்ய வேண்டும்.

4) **ஊழியப்படைக்கு** உரிய **கல்வி, பயிற்சி** வழங்கி **உற்பத்தித்திறனை** அதிகரிக்க வேண்டும்

5) நாட்டில் **உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு** கொண்டு வரப்பட்டு அமைதியான **சூழலும் அரசியல் உறுதிப்பாடும்** ஏற்படுத்தப்படவேண்டும்.

**இலங்கையில் முதலிட்டுள்ள முதன்மை நாடுகள்**

1. தென்கொரியா
2. சிங்கப்பூர்
3. யப்பான்

## வேறுபடுத்தல்

| அ) வெ.நா. வர்த்தக்கடன் | வெ.நா. நேர்முதலீடு |
|---|---|
| 1) எண்ணக்கரு விளக்கம் | ❖ **எண்ணக்கரு** விளக்கம் |
| 2) கடன் அடிப்படையிலானது திரும்ப செலுத்தவேண்டும் | ❖ கடன் நடவடிக்கை அன்று திருப்பிச் செலுத்த வேண்டும் என்பதில்லை (நட்டம்/அழிவு) |
| 3) வட்டி செலுத்தப்படும் | ❖ **இலாபம்** வெளியேறும் |
| 4) நடைமுறையிலுள்ள வட்டி வீதம், **வழங்கும் நாடுகளது** வர்த்தக **கடன் நியந்தனை**களுக்கு உட்பட்டு பெறப்படும். | ❖ **பெறப்படும் நாடுகளது நியந்தனைகளுக்கு** உட்பட்டது |
| 5) **பண்ட வர்த்தக** நோக்கையும் கொண்டிருக்கும் | ❖ வெ.நா. **முகாமைபினையும்** ஒரு அங்கமாக கொண்டிருக்கும். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆ. வெ. நா. உதவி | வெ. நா. நேர் முதலீடு |
|---|---|
| 1) எண்ணக்கரு விளக்கம்<br>2) நடைமுறையிலுள்ள வர்த்தக அடிப்படையிலன்றி கூடுதலான சலுகையின் கீழ்பெறப்படும்<br>3) **கொடைகளும், சலுகைக் கடன்களையும்** உள்ளடக்கும்<br>4) **சிக்கலான பலகாரணிக ளில்** தங்கியுள்ளது உ.ம் அரசியல் பொருளாதார சமூககாரணிகள்<br>5) கடன் வடிவிலான உதவி **கடனையும் வட்டிக்கொடுப் பனவையும்** திருப்பிக் கொடுத்தலுடன் தொடர்பு டையது | ❖ எண்ணக்கரு விளக்கம்<br>❖ **இலாப நோக்கில்** இடம்பெறும் முதல் பாய்ச்சலாகும்<br>❖ முதல் பாய்ச்சலுடன் **முகாமைத்துவ** அம்சமும் **தொழிநுட்பமும்** இணைந்துள்ளது.<br>❖ முற்றிலும் **பொருளாதார நோக்கங்களில்** தங்கியுள்ளது<br>❖ **இலாப வெளிப்பாய்ச்** சலுடன் தொடர்புடையது |

(இ) வெ. நா. நேர் முதலீடு - பட்டியலிடப்பட்ட முதலீடு (Direct Investment) (Portfolio Investment)

1) "ஒரு நாட்டவர் **இலாப** நோக்கில் மற்றொரு நாட்டில் **மூலதனப் பொருட்கள், காணிகள்** போன்ற **மெய்ச்** சொத்துக்களை ஒன்றிணைத்துப் பொருளாதார **முயற்சிகளை ஆரம்பித்தல்** நேர் முதலீடாகும்"

-"ஒரு நாட்டவர் **பங்கிலாபம்** பெறும் நோக்கில் மற்றொரு நாட்டுப் பங்குச் சந்தையில் (பட்டியல் படுத்தப்பட்ட கம்பனியின்) **பங்குகளைக்** கொள்வனவு செய்தல் பட்டியலிடப்பட்ட முதலீடாகும்"

2) நேர்முதலீடென்பது ஒரு **மெய்ரீதியிலான** முதலீடாகும்.

-ஆனால் பட்டியலிடப்பட்ட முதலீடென்பது ஒரு **நிதிசார்** முதலீடாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) நேர்முதலீடு **நீண்டகால நோக்குதடையது.** - ஆனால் பட்டியலிடப்பட்ட முதலீடு **குறுங்கால** **ஊக நோக்குடையது**

4) நேர்முதலீட்டுடன் **முகாமைத்துவம் தொழில் நுட்பம்** என்பன இணைந்துள்ளது பட்டியலிடப்பட்ட முதலீட்டுடன் முகாமைத்துவம், தொழில்நுட்பம் என்பன **இணைந்ததல்ல.**

5) நேர்முதலீட்டுடன் **இலாபம்** தொடர்புடையதாகும். பட்டியலிடப்பட்ட முதலீட்டுடன் **பங்கிலாபம்** தொடர்புடையதாகும்.

ஈ) **வெ.நா. தனியார் முதலீட்டாளரது குறிக்கோள்கள் - முதலீட்டை பெறும் நாட்டவரது குறிக்கோள்கள்**

❖ வெ. நா.தனியார் **முதலீட்டாளரது** பிரதான குறிக்கோள் **இலாபத்தினை உழைப்பதாகும்.**

❖ ஆனால் இதனை **அனுமதிக்கும் நாட்டினதும்** குறிக்கோள்கள் வேறானவையாகவும் பெரும்பாலும் முரணானவையாகவும் காணப்படுகின்றன. அனு மதிக்கும் நாட்டின் சில பிரதான **குறிக்கோள் களாவன:**

1) வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல்
2) விரைவான உற்பத்தி வளர்ச்சி
3) தொழில் நுட்ப ஆற்றலைப் பெறுதலும், அபி விருத்தி செய்தலும்.
4) உள்நாட்டுப் பொருட்களை வெளிநாட்டுச் சந்தை க்கு வழங்குதல்
5) சென்மதி நிலுவையில் சாதக நிலையை ஏற் படுத்தல்.

❖ இவ்வகையில் முதலீடுகளை அனுமதிக்கும் நாடுகளின் சமூக **பொருளாதார குறிக்கோள்கட்கும்,** வெளிநாட்டு முதலீட்டாளர்களின் **தூய இலாபநோக்கத்திற்கும் முரண் பாடுகள்** காணப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## மொத்த உள்நாட்டு மூலதனவாக்கமும் இறக்குமதி உள்ளடக்கமும்

1998 இல் இலங்கையின் மொத்த உள்நாட்டு மூலதன வாக்கத்தில் இறக்குமதி உள்ளடக்கம் 36 சதவீதமாக உள்ளது. இதன்மூலம் பெறக் கூடிய முடிவுகள்;

- மூலதன ஆக்கம் (கட்டிடங்கள், தளபாடங்கள், இயந்திரங்கள், போக்குவரத்துச்சாதனங்கள் தொடர்பாக இலங்கை **இறக்குமதியில் தங்கியிருப்பது** இதன் மூலம் தெளிவாகிறது.
- மூலதனவாக்கத்தை அதிகரிப்பதற்காக **வெளிநாட்டுச் செலாவணிவளங்கள்** தேவையாகவுள்ளன.
- உள்நாட்டில் **மூலதனப்பண்டங்களின் உற்பத்தி** முன்னேற்றமடையவில்லை என்பதும் தெரிகின்றது.

## குறைவிருத்தி – ஓர் விஷச்சக்கரம்

- (குறைவிருத்தி) குறைந்த வருமானம் → குறைந்த சேமிப்புவீதம் → குறைந்த முதலீட்டுவீதம் → குறைந்த மூலதனவாக்கம் → குறைந்த வருமானம் என ஒரு நச்சுவட்டமாகவே குறைவிருத்தி விளங்குகிறது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ இதனைக் கேள்விப்பக்கமாக பின்வருமாறு விளக்கலாம்: குறைந்த வருமானம் → குறைந்த மொத்தக்கேள்வி → குறைந்த விலை → குறைந்த உற்பத்தி → குறைந்த வருமானம்

## இலங்கை ஒரு நடுத்தர வருமானநாடு

* உலகவங்கியின் தரப்படுத்தலின்படி ஐ.அமெரிக்கடொலர் **785 — 3115** வரை வருமானம் கொண்ட நாடுகள் "**கீழ்நடுத்தர வருமான நாடுகள் குழுவாக** (Lower Middle Income Group of Countries )" கொள்ளப்படுகிறது.
* இலங்கையின் தலாவருமானம் (ஐ.அமெரிக்கடொலரில்)

1996 – 759
1997 – 814
1998 - 837

இதன்படி **1997 ஆம் ஆண்டிலிருந்து** இலங்கை ஒரு நடுத்தர வருமான நாடு என்ற அந்தஸ்தைப் பெற்றுள்ளது.

## * இதன் பொருளாதார விளைவுகள் :

1. இலங்கை **வறியநாடு** என்ற நிலையிலிருந்து விடுபடுதல்.

2. இதனால் **வெளிநாட்டுச்சலுகைக் கடன், கொடை** என்பவற்றை பெறுவதில் பாதிப்பு ஏற்படல் - **வட்டிகூடிய சந்தைக் கடனையே** பெற நேரிடல்

3. எனவே இலங்கைக்கு **வெளிநாட்டு முதலீடுகளைப்** பெற்றுக்கொள்வதில் கூடிய கவனம் அவசியமாக உள்ளது. (எனவேதான் அண்மைக்காலத்தில் வெளிநாட்டு முதலீடுகள் முக்கியத்துவம் பெறு கின்றன)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்தகாலப் பரீட்சை வினாக்கள்

1. * வருமான வட்டப்பாய்ச்சலில் சேமிப்பு பொருளாதாரத்தின் ஒரு ஒழுக்காக அமைவதால் மொத்தக் கேள்வியைக் குறைக்கின்றது.

   * பொருளாதார வளர்ச்சியினை ஊக்குவிக்கும் சேமிப்பு முதலீட்டு வளங்களைத் தருகின்றது.

   இக்கூற்றுக்களிடையே எவ்வாறு இணக்கம் காண்பீர்?

   (1998 புதிய)

2. வெளிநாட்டு நேரடி முதலீட்டின் பயன்கள் யாவை?

   (i) புதிய தொழில்நுட்பங்களை நாட்டுக்குள் கொண்டுவரல்
   (ii) அரச பாதீட்டுக் குறைநிலை நிதியீட்ட உதவிக்குரிய வளங்களைக் கொண்டுவரல்
   (iii) ஊழியத்துக்கான உயர்ந்த கூலிக்கு வழிவகுத்தல்.
   (iv) சர்வதேசப் போட்டித்தன்மையைப் பெற்று ஏற்றுமதிக்கான சந்தையை விருத்தி செய்தல்.

   (1998 புதிய –பகுதி –I)

3. 'குறைவிருத்தியானது அடிக்கடி ஒரு விஷச்சக்கரமாகவே விளக்கப்படுகிறது. இக்கூற்றிலிருந்து நீங்கள் விளங்கிக் கொள்வது யாது?

   (1998 பழைய)

4. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளிலான பொருளாதார அபிவிருத்திக்கு வெளிநாட்டு நேரடி முதலீடுகள் செய்யக்கூடிய பங்களிப்பினைப் பரிசீலிக்குக.

   ( 1998 பழைய)

5. இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதத்தினைக் குறிப்பிடத்தக்க அளவுக்கு உயர்த்துவதற்கு , மொத்த உள்நாட்டு உற்பத்தியில், இன்றுள்ள , ஏறத்தாழ 25



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதவீதமான முதலீட்டு வீதத்தினைப் பெருமளவுக்கு அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது எனக் கூறப்படுகின்றது.
முதலீட்டு வீதத்தினை அதிகரிப்பதற்கு இலங்கை என்ன வழிமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும் ?

(1997 புதிய)

6. 1996 இல் அமெரிக்கடொலர் 760 என்ற தலாமொத்த உள்நாட்டு உற்பத்தி மட்டத்தில், இலங்கை ஒரு நடுத்தர வருமானநாடு என்ற இடத்தைப் பெறுவதற்கான கட்டத்திற்கு வந்துள்ளது என மத்தியவங்கி அறிவித்துள்ளது. இந்த அபிவிருத்தியின் பொருளாதார விளைவுகள் யாவை ?

(1997 பழைய)

7. பொருளாதாரத்தில் மொத்த முதலீட்டு மட்டத்தை உயர்த்தும் ஒரு முக்கிய வழியாக இலங்கை நேரடி வெளிநாட்டு முதலீட்டைப்பெற்றுக்கொள்ளத் தீவிர முயற்சி மேற்கொள்கின்றது. இலங்கையினது சமூக-பொருளாதார நிலமையில் காணப்படும் எக்காரணிகள் இம்முயற்சிக்குச் சாதகமாக உள்ளன? எக்காரணிகள் இதற்கு வரையறைகளாக அல்லது தடைகளாகச் செயற்படலாம் ?

(1996)

8. (i) வெளிநாட்டு உதவிக்கும் 'வெளிநாட்டு நேர் முதலீட்டிற்கும்' இடையிலான வேறுபாட்டை எடுத்துக் காட்டுக.

(ii) ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதற்காக வெளிநாட்டு நேர்முதலீட்டின் மீது தங்கியிருத்தலுக்குச் சார்பாகவும், எதிராகவும் விவாதிக்க. இலங்கையுடன் தொடர்புபடுத்தி விடையளிக்குக.

(iii) வெளிநாட்டு நேர்முதலீட்டின் உட்பாய்ச்சலை அதிகப்படுத்துவதற்கு ஓர் அரசாங்கம் எந்நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் ?

(1995)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. அண்மிய ஆண்டுகளிலே இலங்கையினுட்பாய்ந்த தனியார் துறை வெளிநாட்டு மூலதனம் கணிசமாக அதிகரித்துள்ளது. இந்த மூலதனம் எவ்வடிவங்களில் இலங்கையினுட் பாய்ச்சப்படுகின்றது? வெளிநாட்டு மூலதனப் பாய்ச்சல் அதிகரித்திருப்பதன் பொருளாதார விளைவுகள் யாவை?

(1994 )

10. இலங்கையிலே முதலீட்டுக்குத் தேவையான வளங்களுக்கும் உண்ணாட்டுச் சேமிப்புகளினூடாகத் தோற்றுவிக்கப்படும் வளங்களுக்கும் (வருவாய்களுக்கும்) இடையில் அகன்ற இடைவெளியொன்று காணப்படுகின்றது.

(i) அண்மைக்கால ஆண்டுகளில் இலங்கையிற் காணக்கூடியதாயிருந்த முதலீட்டு விகிதம் யாது?
(ii) அண்மைக்கால ஆண்டுகளில் உண்ணாட்டுச் சேமிப்புகள் என்ன விகிதத்தில் அமைந்திருந்தன?
(iii) சார்பளவில் சேமிப்பு விகிதம் குறைவாக இருப்பது ஏன்?
(iv) முதலீட்டுக்கும் சேமிப்புக்குமிடையிலான வள இடைவெளியை நிரப்புவதற்குப் பயன்படுத்தப்பட்ட முறைகள் யாவை? அத்தகைய முறைகளைப் பயன்படுத்தியமையின் விளைவுகளாக இருந்தவை யாவை?
(v) உண்ணாட்டுச் சேமிப்பின் மட்டத்தை உயர்த்துவதற்கு நீர் எந்நடவடிக்கைகளை முன்மொழிவீர்?

(1990 விசேட)

11. (அ) அண்மை ஆண்டுகளில் மொத்த உண்ணாட்டு மாறா மூலதனவாக்கத்தில் இறக்குமதி உள்ளடக்கம் சுமார் 23 சதவீதமாக உள்ளது.
(ஆ) அண்மை ஆண்டுகளில் இலங்கையின் தேசிய சேமிப்பு விகிதம் சுமார் 15 சதவீதமாக இருக்க, அதன் முதலீட்டு விகிதம் கிட்டத்தட்ட 25 சதவீதமாக இருக்கின்றது.

மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு கூற்றிலிருந்தும், இலங்கையின் பொருளாதார அபிவிருத்திச்செயன்முறை பற்றி நீர் செய்யக்கூடிய முடிவு யாது?

(1989 )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில் வாய்ப்புக் கொள்கைகள்

**தொழில் வாய்ப்பைத் தீர்மானிக்கும் பிரதான மூலங்கள்:**

1. நாட்டின் மொத்த உற்பத்தி மட்டம்
2. அதன் ஊழியச் செறிவு

## ஊழியச் செறிவின் முக்கியத்துவம் :-

ஊழியச் செறிவான தொழில் நுட்பம் உற்பத்தியில் பயன் படுத்தப்படும் அளவிற்குத் **தொழில்வாய்ப்பு** அதிகரிக்கும்.

## ஊழியச் செறிவினைப் பாதிக்கும் அம்சங்கள்

1. உற்பத்தி செய்யப்படும் **பொருள்வகை**
2. **நிறுவன அமைப்பு முறை** உ + ம் சிறிய முயற்சிகள்

## தொழில் வாய்ப்பை அதிகரிக்கக்கூடிய இரு முறைகள்:-

1. பொருளாதாரத்தின் உற்பத்தி **வளர்ச்சியூடாக** ஊழியத் திற்கான **கேள்வியை** அதிகரிக்கச் செய்தல்
2. ஊழியத்தின் **கேள்விக்குப் பொருத்தமான பயிற்றப்பட்ட ஊழியத்தை நிரமபல் செய்யக்கூடிய பயிற்சித் திட்டங் களை** மேற்கொள்ளல்.

## சுயதொழில் வாய்ப்பு

- இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடு களின் தொழில்வாய்ப்புக் கொள்கையில் சுயதொழில் வாய்ப்புக்கள் **முக்கிய இடம்** வகிக்கின்றன இதற்கான **காரணங்கள்:-**
  - மூலதனம் பற்றாக்குறையாக இருத்தல்
  - நிறுவன அமைப்புக்கள் வளர்ச்சியடையாதிருத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❁ சுயதொழில் முயற்சிகளை ஊக்குவிப்பதற்கு அரசாங்கம் மேற்கொள்ளக்கூடிய **நடவடிக்கைகள்**

1) மூலதனத்திற்கான நிதிகளை சலுகை கடன்கள் மூலம் வழங்குதல்
2) தொழிற்பயிற்சித்திட்டங்களை செயற்படுத்தல்
3) முகாமைப்பயிற்சிகளை வழங்குதல்
4) சுயதொழில் உற்பத்திக்கான சந்தைவாய்ப்புக்களை உருவாக்குதல்

## நிறைதொழில்மட்டம்

❖ பொதுவாக நிலம், உழைப்பு, முதல், முயற்சி என்ற **எல்லாவளங்களும்** முழுமையாகப்பயன்படுத்தப்படுகின்ற நிலை நிறைதொழில் மட்டம் எனப்படும்.

❖ எனினும் ஊழியம் வேலையின்றி இருப்பது சமூகபொருளாதாரப்பிரச்சினையை உருவாக்கும் என்பதால் **ஊழியத்தைப் பயன்படுத்தி** நிறைதொழில் மட்டம் விளக்கப்படுகிறது.

"**தொழிற்படையில் 95%** அல்லது அதற்கு கூடுதலான தொழில்வாய்ப்புப் பெற்றிருத்தல் அல்லது **வேலையின்மை 5%** அல்லது அதற்கு குறைவாக இருத்தல் நிறை தொழில் மட்டமாகும்"

❖ எந்த ஒரு பொருளாதாரத்திலும் ஒரு தொழிலிருந்து இன்னொரு தொழிலுக்கு மாறுதல், கல்வி, பயிற்சி முடித்து தொழில் வாய்ப்புப்பெறுதல் என்பவற்றுக் கிடையில் ஓரளவு **தற்காலிக (உராய்வு) வேலையின்மை** எப்பொழுதும் இருக்கும். எனவே பொதுவாக ஏற்றுக்கொள்ளக் கூடிய வேலையின்மையாக 5% கொள்ளப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறைதொழில் மட்ட இலக்கின் முக்கியத்துவம்

1) எந்த ஒரு பொருளாதாரத்திலும் உற்பத்திக்கு ஊழியம் அவசியமான ஒரு காரணியாகும். இதனை முழுவதாக உற்பத்தியில் பயன்படுத்தாவிட்டால் சாத்தியமான உற்பத்தியிலும் **குறைவான உற்பத்தியே** நிகழும். எனவே வருமான அதிகரிப்பிற்கு நிறைதொழில் மட்டம் உதவும்.

2) இது ஒரு முக்கியமான **வளம் வீணாகக்ப்படுவதைத்** தடுக்கும்

3) ஊழியம் வேலையின்றி இருப்பது சமூகப்பொருளாதாரப்பிரச்சினையை உருவாக்கும் என்பதால் **சமூக பொருளாதார நெருக்கடிகளை அகற்று** வதற்கான ஒரு சிறந்த முயற்சியாக இது காணப் படுகிறது.

4) வேலையின்மைக்கும் வறுமைக்கும் நெருங்கிய தொடர்புண்டு, எனவே **வறுமையைக்குறைப்பதன்** அடிப்படையிலும் இது முக்கியம் பெறுகிறது.

## *நிறைதொழில் மட்டத்தை அடைவதற்கான / வேலையின்மையைக் குறைப்பதற்கான பொருளாதார வளர்ச்சி*

- இலங்கையில் தற்போது (1998ல்) வேலையின்மை (10 இலட்சம் பேராக) ஏறத்தாழ 9% ஆக உள்ளது.
- வேலையின்மையை 5% இற்கு குறைப்பதற்கு பொருளாதார **வளர்ச்சிவேகம் உயர்வாக** ஏறத்தாள 10%மாக இருக்கவேண்டும்.
- இதற்கு முதலீட்டுவீதம் தற்போதைய 25% இலிருந்து 30% இற்கு கூடுதலாக உயர்த்தப்பட வேண்டும்- உள்நாட்டுச் சேமிப்புவீதம் 19% மாக உள்ளநிலையில் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பதன் மூலமே இதனை அடையலாம்.
- **வேலைவாய்ப்பை உருவாக்கக்கூடிய துறைகளிலான** வளர்ச்சி துரிதமாக்கப்படவேண்டும்.

(உ+ம்): ஊழியர்ச்செறிவான தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தும் ஆடைக்கைத்தொழில், சுயதொழில் வாய்ப்புக்கள், குடிசைக் கைத்தொழில், சிறிய நடுத்தரக் கைத்தொழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாட்டு தொழில் வாய்ப்பிற்கான ஊழியப் பெயர்வின் பொருளாதார விளைவுகள் / முக்கியத்துவம்

***சாதகமானவை:***

1) வெளிநாட்டு தனியார் மாற்றல் வருவாய் அதிகரிக்கும் - சென்மதிநிலுவை நெருக்கடியைக்குறைக்கும்

2) வேலையின்மை வீதம் குறையும்.

3) வீட்டுத்துறையின் வருமானம் உயர்வதால் அவற்றின் சேமிப்பு அதிகரிக்கும்

4) சிறந்த தொழில் பயிற்சியைப் பெற்றுக்கொள்ளல்

***பாதகமானவை:-***

1) தேர்ச்சிபெற்ற ஊழியர்களின் வெளியேற்றம் - உள்நாட்டு உற்பத்தியில் பாதிப்பை ஏற்படுத்தும்

2) குடும்ப இணைப்பு துண்டிக்கப்படல், வெளிநாட்டு கலாசாரம் உள்நாட்டு கலாசாரத்தைப் பாதித்தல் (இது சமூகவிளைவு)

## கடந்தகாலப் பரீட்சை வினாக்கள்

1) ஊழிய வெளிப்பெயர்வின் பொருளாதார முக்கியத்துவத்தைச் சுருக்கமாக கூறுக.

(1998 பழைய)

2) இலங்கையின் வேலையின்மை நிலைமைபற்றியும், வேலையின்மை வீதத்தினைக் குறிப்பிடத்தக்க அளவில் குறைத்துக் கொள்வதற்குத் தேவையான பொருளாதார வளர்ச்சியின் தன்மை பற்றியும் ஒரு சுருக்கமான குறிப்புரை எழுதுக.

(1997 புதிய)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) i) நிறை தொழில் மட்டம் ஏன் ஒரு முக்கியமான பொருளாதார இலக்காகக் கருதப்படுகின்றது?

ii) இலங்கை இந்த இலக்கிலிருந்து எவ்வளவு தூரத்திற்கு விலகி உள்ளது?

iii) வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காகக் குடிபெயர்தலின் பொருளாதார விளைவுகள் யாவை? இலங்கையுடன் சிறப்பாகத் தொடர்புபடுத்தி ஆராய்க?

(1995)

4) இலங்கையினது வேலையின்மையினை 5.0 வீதத்திற்குக் குறைக்கும் இலக்கினது பொருளாதார முக்கியத்துவத்தினைச் சுருக்கமாக விளக்குக.

III

# வறுமை ஒழிப்புக்கொள்கைகள்

**வறுமை – வரைவிலக்கணம்**

"மக்கள் தமது **அடிப்படைத் தேவைகளைக்கூட நிறைவு செய்து கொள்ள முடியாதநிலமை** வறுமை எனப்படும்

## வறுமையின் இருவித அளவீடுகள்

1) முழு வறுமை (சாரா வறுமை)
2) சார்பு வறுமை - எல்லா நாட்டிலும் இருக்கும்

## முழுவறுமை / சாராவறுமை

- வறுமையை இனங்காணும்போது **முழுமைவறுமையே முக்கியம்** பெறும்.
- முழுவறுமையை **இனங்காணும் போது** கருத்திற்கொள்ள வேண்டிய **இரு முக்கிய விடயங்கள் :**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) தொழிலில் ஈடுபட்டுள்ளோர் உழைக்கும் **வருமானம் வீழ்ச்சியடைதல்**

2) உணவும் போசாக்கும், கல்வி, சுகாதாரம், வீட்டுவசதி போன்ற **அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாதிருத்தல்.**

## வறுமையைக் குறைப்பதற்கான வழிவகைகள்

1) முறைசார்ந்த தொழில்வாய்ப்புக்கள் தவிர வருமானத்தை உயர்த்தக்கூடிய பிரதான வழி **சுயதொழில் விருத்தி** யாகும்.

இதற்காக — ஊழியத்தைப்பயிற்றுவித்தல்
- கடன் வசதியளித்தல்
- முயற்சியாண்மைவிருத்தி என்பவற்றை ஏற்படுத்தவேண்டும்.

2) வறியமக்கட்- பிரிவினரின் **அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத்தேவையான வசதிகளை** அரசாங்கம் வழங்க வேண்டும்.

இதற்காக - அறிவுறுத்தல் வழங்குதல்
- தேவையான வசதிகளை வழங்குதல்
- வறியபிரிவினருக்கு மானியங்களை வழங்குதல் என்பவற்றை மேற்கொள்ள வேண்டும்.

## பொருளாதார வளர்ச்சியும் வறுமைதணிப்பும்

❁ **பொருளாதார வளரச்சி** என்பது ஒரு நாட்டின் மெய்த்தேசிய உற்பத்தி / வருமானத்தில் ஏற்படும் **தொடர்ச்சியான** அதிகரிப்பாகும். அது நாட்டுமக்களின்

- வேலைவாய்ப்பை அதிகரிக்கும்
- வருமானத்தை அதிகரிக்கும் எனவும் இவ்வருமான அதிகரிப்பானது மக்கள் தமது **அடிப்படைத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும்** அதனூடாக வறுமையைப் போக்கவும் உதவும் எனப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❀ ஆனால் **இது கட்டாயம் இடம்பெறும் எனக்கூற** முடியாது – பொருளாதார வளர்ச்சி வறுமையை ஒழிக்க வேண்டுமாயின் வளர்ச்சியின் **நன்மைகள் வறிய மக்களைச்** சென்றடையவேண்டும். அதாவது பொருளாதார வளர்ச்சியினால் வறியமக்கள் **அதிகளவு தொழில் வாய்ப்புக்களையும், உயர்வருமானங்களையும்** பெற்றுக் கொள்ளல் வேண்டும். மேலும் அடிப்படைத் தேவைகளான **போசாக்குணவு, கல்வி, சுகாதார மருத்துவ வசதிகள், வீட்டுவசதிகள்,** போன்றவற்றை வறிய மக்கள் பெறுவதற்கு பொருளாதார வளர்ச்சி உதவவேண்டும்.

- ஆனால் பொருளாதாரவளர்ச்சியானது இத்தகைய **சுயமான இயக்கத்தைக் கொண்டிருப்பதில்லை** இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் மூலதன அதிகரிப்பின் (இயந்திரபாவனை) மூலம் அடையப்படும் பொருளாதாரவளர்ச்சி உயர் வருமானத்தவரின் வருமானத்தையே அதிகரிக்கும் நிலையும், **வேலையின்மையை** அதிகரிப்பதன் மூலம் வறுமையை அதிகரிக்கும் நிலையும் காணப்படுவதால், அதாவது **வருமானப்பங்கீட்டில் சமத்துவமின்மை அதிகரிப்பதனால்** குறைந்தளவு வருமானம் உழைப்பவர்கட்கு கிடைக்கின்ற நன்மை வரையறுக்கதப்பட்டதாகவே காணப்படுகின்றது.

- **அடிப்படைத்தேவைகள் பூர்த்தி செய்யப்படாத நிலை** இடம் பெறலாம்.
(உ+ம்) போசாக்குணவு, கல்வி, சுகாதார மருத்துவ வசதி வீட்டுவசதி போன்றவை

❀ இவற்றின் காரணமாக **வறியவர்களை இலக்காகக் கொண்ட விசேட திட்டங்கள்** தேவைப்படுகின்றன. உ+ம் ஜனசவிய, சமுர்த்தி

## இலங்கையின் வறுமை தணிப்புத் திட்டங்கள்

1) உணவு மானியத்திட்டம்
2) உணவு முத்திரைத்திட்டம்
3) ஜனசக்தித் திட்டம்
4) சமுர்த்தித் திட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. உணவு மானியத்திட்டம் :

- இரண்டாம் உலக மகாயுத்தகாலத்தில் 1940 களிலிருந்து இத்திட்டம் நடைமுறையில் உள்ளது. இத்திட்டத்தில் அரிசிக்கும் உபஉணவுப் பொருட்களுக்கும் மானியங்கள் வழங்கப்பட்டன. அரிசி பங்கீட்டுத்திட்டத்தில் இலவசமாகவும் வழங்கப்பட்டது. 1994ல் கோதுமை மாவிற்கு மானியம் வழங்கப்பட்டது.
- இந்த மானியத்திட்டம் ஏழைகளுக்கு மட்டுமன்றி செல்வந்தருக்கும் கிடைத்தமை குறைபாடுடைய தாகும். அத்துடன் உள்நாட்டு உற்பத்திப் பொருட்களுக்கு கிடைக்கக் கூடிய விலையைக் குறைத்தமையால் உற்பத்தியாளர் வருமானத்தைப் பாதித்து ஊக்கமிழக்கச்செய்தது. இதனால் 1979 இல் உணவு முத்திரைத்திட்டம் நடைமுறைக்கு வந்தது.

## 2. உணவுமுத்திரைத்திட்டம்

- 1979இல் அறிமுகப்படுத்தப்பட்ட இத்திட்டத்தின்கீழ் மாதாந்தம் 300 ரூபாவுக்கு குறைந்த வருமானமுள்ள குடும்பத்திற்கு உணவுமுத்திரை வழங்கப்பட்டது. பணவீக்கம் காரணமாக 1986 இல் இவ்வருமான எல்லை 700 ரூபாவாக அதிகரிப்பட்டது. இத்திட்டம் ஜனசக்தி, சமுத்தித் திட்டத்தின் பின் அகற்றப்பட்டு வருகிறது.

## 3. ஜனசக்தித்திட்டம்

- இத்திட்டம் 1989 இல் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இது மனிதவள அபிவிருத்தியினை அடிப்படையாகக் கொண்டதாகும்.

- இதன்கீழ் சுயதொழில் உருவாக்கம் பிரதான இடத்தினை வகித்தது.
- அதேவேளை வறியோரின் போஷாக்கு மட்டத்தினை உயர்த்துவதிலும் கவனம் செலுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. சமுர்த்தித்திட்டம்

- 1995யூனில் இத்திட்டம் தொடக்கப்பட்டது
- இத்திட்டம் ஏற்கனவே நாட்டில் காணப்பட்ட உணவு முத்திரைத் திட்டம், மதிய உணவுத்திட்டம், ஜனசக்தித்திட்டம் போன்றவற்றை அகற்றியது.
- 1998 இல் இத்திட்டத்தின்கீழ் நன்மைபெறுபவர்களில்
  - மிக வறிய 1 வீதத்தினருக்கு 1000 ரூபாவும்
  - 45 வீதமானவர்களுக்கு 500 ரூபாவும்
  - எஞ்சிய 54 வீதமான குடும்பங்களுக்கு அங்கத்தினர் எண்ணிக்கையைப் பொறுத்து 200 ரூபா, 100 ரூபா மாதாந்த கொடுப்பனவாக வழங்கப்பட்டது.
- 1.2 மில்லியன் குடும்பங்கள் இலக்கமிடப்பட்டிருந்தும் 1998ன் இறுதியில் 2 மில்லியன் குடும்பங்கள் இதனால் நன்மையடைந்தனர். இது மக்கள் தொகையில் **51 சதவீதமாகும்.- உண்மையில் வறிய பிரிவின்** சனத்தொகையில் 30 - 40% எனவே மதிப்பிடப்பட்டுள்ளது
- 1998 இல் இதன் **மொத்தச் செலவு** 8000 மில் ரூபா
- **சமுர்த்தி இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சு** இதன் **கொள்கை உருவாக்கலுக்கு** முக்கிய பொறுப்பாகும் இவ்வமைச்சின்கீழ்

A வறுமை நிவாரணத்திணைக்களம்

B இளைஞர் சமுர்த்தி அதிகாரசபை

C சமுர்த்தி ஆணையாளர் நாயகத்திணைக்களம் ஆகிய மூன்றும் தேசிய மட்டத்தில் இத்திட்டத்தினை **நடைமுறைப்படுத்துகின்றன.**

- **சமுர்த்தி அதிகாரசபைக்கு** பொறுப்பாக சமுர்த்தி ஆணையாளர் நாயகம் நியமிக்கப்பட்டுள்ளார். சமுர்த்தி முகாமையாளர்களும், வழிகாட்டிகளும் நியமிக்கப் பட்டுள்ளனர்.

## இதன் இலக்குகளாவன:

1. - வறுமையை ஒழித்தல்
2. - மனித மூலவளங்களை விருத்தி செய்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. - போசாக்கு மட்டத்தினை உயர்த்துதல்
4. - சேமிப்பை உயர்த்துதல்
5. - சமூக, பொருளாதார பொது வசதிகளை உயர்த்துதல்
6. - வறியோருக்கு இலகு கடன்களை வழங்குவதன் மூலம் உற்பத்தி மட்டத்தினை உயர்த்துதல்

*உ-+ம் சுறத்தரத்திரிய சசன*

7. - சுயதொழில்வாய்ப்புக்களை அதிகரித்தல் என்பனவாகும்.

## ❀ சமுர்த்தித்திட்டத்தின் கீழான நிகழ்ச்சித் திட்டங்களாவன

1) கிராமியச்சமூகச் செயற்திட்டங்கள்
2) கட்டாய சேமிப்புத்திட்டம், தன்விருப்புச் சேமிப்புத்திட்டம்
3) சமுர்த்தி அபிவிருத்திக்கொடுகடன் திட்டம்(சசன)
4) நயநியமக நிகழ்ச்சித்திட்டம்
5) வேளாண்மை அபிவிருத்தி மனிதவள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்.

# கடந்தகாலப் பரீட்சை வினாக்கள்

1. வளர்முக நாடொன்றிலே பொருளாதார வளர்ச்சி மட்டும் வறுமையினைத் தணிக்க முடியாது எனப்பெரும்பாலும் கூறப்படுகிறது. ஆதலால் வறியோர் அபிவிருத்தித் தேவைகளை மையமாகக் கொண்ட விசேட திட்டங்கள் தேவைப்படுகின்றன.

   i) இக் கூற்றினை விளக்கி உமது கருத்துரையினைத் தரவும்
   ii) இலங்கையிலான வறுமை தணிப்புத் திட்டங்களின் தொழிற்பாடு பற்றி விமர்சன ரீதியில் ஆராய்க (1997புதிய)

2. இலங்கையில் வறுமை தணிப்புத் தொடர்பாகப் பின்பற்றப்பட்டுவந்த உபாயங்கள் பற்றி ஒரு சுருக்கமான குறிப்புரை எழுதுக. (1997பழைய)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

IV

# விவசாய அபிவிருத்திக்கொள்கைகள்

## விவசாயத்தின் முக்கியத்துவம்

1) பெரும்பாலானோரின் சீவனோபாயமார்க்கமாக இருத்தல் (72%ண்)
2) வறியவர்களில் அதிகமானோர் விவசாயத்துடன் தொடர்புபட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டிருத்தல்.
3) உணவு வழங்கலும், கைத்தொழிலுக்கு மூலப்பொருள் வழங்குதலும்.
4) ஏற்றுமதி வருமானத்தைப் பெற்றுத்தருதல்(23%)
5) இறக்குமதிப்பதிலீடுகளை உருவாக்குதல்

## இலங்கை விவசாயத்துறையின் இரு பிரிவுகள்

அ) ஏற்றுமதி விவசாயம்
ஆ) உள்நாட்டு விவசாயம்

### *அ) ஏற்றுமதி விவசாயம்*

"தேயிலை, இறப்பர், தெங்கு போன்ற பிரதான பெருந்தோட்டப்பயிர்கள் மூன்றையும், சிறுஏற்றுமதிப் பயிர் களையும் இது உள்ளடக்கும்"

### *ஏற்றுமதி விவசாயம் தொடர்பான கொள்கை வகுக்கும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள்*

1. - விளைநிலங்களிலிருந்து பெறப்படும் விளைச்சலை அதிகரிப்பதற்கும் (நிலச்செறிவை கையாளல்)
   - விவசாயத்திற்கு ஏற்படும் செலவுகளைக் குறைப்ப தற்கும் அவசியமான முகாமையையும், தொழிநுட்பங் களையும் பயன்படுத்துவதன் மூலம் இலாபத் தன்மையை அதிகரிக்கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. உலகசந்தையில் போட்டித்தன்மையை அதிகரிப்பதும் ஏற்றுமதி விவசாயத்துறைக்கு அவசியமாகும்.

3. சிறுதோட்ட உரிமையாளர்களது பிரச்சினைகளையும், சிறுஏற்றுமதிப் பயிர்ச்செய்கை தொடர்பான பிரச்சினை களையும் இனங்காணல்

## ஏற்றுமதிப்பயிர்ச்செய்கை தொடர்பான அபி விருத்திக் கொள்கைகளில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள்

1. மீள்பயிர்ச் செய்கைக்கு உற்பத்தி மானியங்களையும் வழங்குதல்
2. விவசாய விரிவாக்க சேவைகளை வழங்குதல்
3. சந்தையை ஊக்குவிப்புச் செய்யும் நடவடிக்கைகள்
4. சிறு உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை களுக்குத் தீர்வுகாணும் நடவடிக்கைகள் எடுத்தல்.

## பெருந்தோட்ட உடமை, முகாமையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்

1972, 1975 ஆகிய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட நிலச்சீர்திருத்தச் சட்டங்கள் மூலம் பெருந்தோட்ட உரிமை அரசின் வசம் சென்றிருந்தது. ஆனால் அண்மை ஆண்டுகளில் இதில் பின்வரும் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளமை.

1. 1992இல் பெருந்தோட்டங்கள் புனரமைப்புத்திட்டத்தின் கீழ் அரச பெருந்தோட்டங்கள் 5 வருட ஒப்பந்தத்தின் அடிப்படையில் தனியார் முகாமை நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது.

2. 1995 இல் குத்தகை நீடிக்கக்கூடிய உரிமையுடன் அரச பெருந்தோட்டங்களின் முகாமை 50வருடங்களுக்கு தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. அரச பெருந்தோட்டங்கள் பங்குச்சந்தையினூடாக உள்நாட்டு, வெளிநாட்டுத்தனியாருக்கு விற்கப்படுகின்றது.

4. இலங்கைப்பெருந்தோட்டங்களை மீண்டும் வெளிநாட்டவர்கள் கொள்வனவு செய்தல்

## ஆ) உள்நாட்டு விவசாயம்

"அடிப்படையில் நெல்லுற்பத்தியும் உபஉணவுப்பயிர்ச் செய்கையும் இதிலடங்கும்"

- பரந்த அடிப்படையில் **மிருகவளர்ப்பும், மீன்பிடித் தொழிலும்** விவசாயத்தில் உள்ளடங்கும்

## உள்நாட்டு விவசாயம் தொடர்பான பிரச்சினைகள் :

1) சிற்றுடமை விவசாயம் → நவீன முறைகளை பயன்படுத்த முடியாமை → குறைந்த விளைவு மட்டம்
2) விலைத்தளம்பலும், சந்தைப்படுத்தல் பிரச்சனைகளும்
3) மூலதனப்பற்றாக்குறை கடன் வசதிகள் குறைவாக இருத்தல்
4) இருபோக விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளு தலில் எதிர்நோக்கப்படும் **நீர்ப்பற்றாக்குறை**

உள்நாட்டு விவசாய**க்கொள்கைகளை வகுக்கவேண்டியதன் அவசியத்தை**, இப்பிரச்சினைகள் எடுத்துக்காட்டுகின்றன.

## உள்நாட்டு விவசாயக் கொள்கைகளை வகுக்கும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய அம்சங்கள்:-

1) விவசாய விரிவாக்க சேவைகள்
2) உத்தரவாத விலைத்திட்டமும், சந்தைப்படுத்தல் வசதிகளும்
3) விவசாயக்கடன் திட்டம்
4) நீர் விரயத்தைத் தடுப்பதற்கான நீர் முகாமைத்துவம்
5) விதைகளையும் ஏனைய உள்ளீடுகளையும் வழங்குதல்
6) சிற்றுடமை நிலங்களை ஒன்றிணைத்து நவீனமயப்படுத்தப்பட்ட விவசாயமுறைகளை மேற் கொள்ளல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரிசி உற்பத்தி அதிகரித்தபோதும் சிறு விவசாயிகளின் வருமானம் அதிகரிக் காமைக்கான காரணங்கள்

1) சிற்றுடமை விவசாயம் நவீனமுறைகளைப் பயன்படுத்த முடியாமை நெல் உற்பத்தியில் **ஏக்கருக்கான விளைச்சல்** குறிப்பிடத்தக்களவில் அதிகரிக்கவில்லை

2) நெல்லுக்குக்கிடைக்கும் **விலையானது** நாட்டின் **பணவீக்கத்துடன்** ஒப்பிடுகையில போதுமானதன்று.

3) நெல்லுற்பத்தியில் கையாளப்படும் **கிருமிநாசினிகள், பசளைகள், உபகரணங்கள்** என்பவற்றின் விலைகள் உயர்ந்துள்ளன.

4) **இடை நிலை** வர்த்தகர்கள் காரணமாக நெல்விவசாயிகள் உரியவிலையை பெறமுடியாதுள்ளனர்.

5) முலதனப்பற்றாக்குறை விவசாயக்கடன்கள் மீதான **வட்டிவீதங்கள்** உயர்வாக இருத்தல்

## கடந்த கால பரீட்சை வினாக்கள்

1) இலங்கையில் பெருந்தோட்டங்களின் உடமை, முகாமை என்பவற்றில் அண்மைய ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள முக்கிய மாற்றங்கள் யாவை?

(1996)

2) "அரிசி உற்பத்தியில் ஏறத்தாழ சுயதேவையைப் பூர்த்தி செய்யும் நிலையை இலங்கை எய்தியுள்ள போதிலும் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள சிறுவிவசாயிகள் பெற்றவருமானம் பொதுவாக அதிகரிக்கவில்லை" இக் கூற்றுப்பற்றிக் கருத்துரைக்குக.

(1994)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

V

# கைத்தொழில் அபிவிருத்திக் கொள்கைகள்

## கைத்தொழிற்துறையின் முக்கியத்துவம் :-

1. எதிர்கால **தொழில்வாய்ப்பினை** வழங்கும் பிரதான துறையாக அமைவது.
2. தேசிய உற்பத்தி வளர்ச்சியின் பிரதான மூலாதார துறையாக அமைவது கைத்தொழில்
3. (புதிய) **நவ கைத்தொழில் நாடாக** மாறும் இலக்கு கைத்தொழில் துறையை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது.
4. **ஏற்றுமதி வருமானத்தின் பெரும்பகுதி** கைத்தொழிற் துறையிலிருந்து கிடைத்தல். (1998 இல் 75%)
5. **வெளிநாட்டுச் சந்தையை** அடிப்படையாகக் கொண்டு கைத்தொழில் துறையின் விரிவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம்.
6. **பிரதேச அபிவிருத்திக்கு** கைத்தொழில்துறை முக்கியமானதாக இருந்தது

## இலங்கை கைத்தொழிற்துறை அமைப்பு / சேர்க்கை / வகை (1998 ல்)

1. ஆக்க / உற்பத்தி / தயாரிப்புத்தொழில்
(மொ.உ.உ.இல் 22%)
2. அகழ்வுக் கைத்தொழில்
(சுரங்கம் , கல்லுடைத்தல் ) ( மொ.உ.உ.இல் 2.5)

* ஆக்கக கைத்தொழில் / தயாரிப்புத்தொழில் வகை:-

1. பெருந்தோட்ட பயிர் / ஏற்றுமதி பதனிடல்
2. தொழிற்சாலைக் கைத்தொழில்
(இது தயாரிப்பு தொழில் உற்பத்தியில் 84%)
3. சிறுகைத்தொழில், குடிசைக் கைத்தொழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* உடமையாளர் அடிப்படையில் மொத்தக் கைத்தொழில் உற்பத்தியில்

1. தனியார்துறை 90%
2. அரசுத்துறை 10%

## இலங்கையின் கைத்தொழில் அபிவிருத்தியின் பிரதான இயல்புகள் :-

1. **இறக்குமதி மூலப்பொருட்களில்** பெருமளவு தங்கியிருத்தல்.
2. தனியார் மயப்படுத்தலின் விளைவாக **அரசுதுறைக் கைத்தொழிலின் பங்கு குறைந்து** வருதல்.

1980 – 67%
1985 – 47%
1998 – 10%

3. இலங்கைப் பொருளாதாரத்தில் **துரித வளர்ச்சியடையும்** துறையாக இது காணப்படுதல்.
4. **ஏற்றுமதி** குறித்த கைத்தொழில்களில் **துரித வளர்ச்சி** காணப்படுதல்.
5. குறிப்பிட்ட **சில பண்டங்களின் உற்பத்தியினை** மட்டுமே மையமாக இருத்தல். உ+ம் ஆடைத்தொழில்
6. **இத்துறையில் வெளிநாட்டு முதலீடுகள்** அதிகரித்து வருதல்.

## கைத்தொழில் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள்:-

*அண்மையாண்டுகளில் பின்வரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன*

(1) **மொத்தத் தேசிய உற்பத்திக்கு** ஆக்கக் கைத்தொழில் வழங்கும் பங்கு அதிகரித்துள்ளது.

1983 – 15%
1998 – 22%

(2) **தொழில் வாய்ப்புக்களை** வழங்கும் துறையாக மாறி வருகிறது. - குறிப்பாக ஆடைக் கைத்தொழில் அதிகளவில் தொழில் வாய்ப்பை வழங்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) கைத்தொழில்துறையில் வெளிநாட்டு முதலீட்டின் பங்கு அதிகரித்துள்ளது.

(4) கைத்தொழில் துறையின் வெளியீட்டு மட்டம் அதிகரித்துள்ளதுடன் உற்பத்தித்திறனும் அதிகரித்துள்ளது.

(5) தனியார் மயப்படுத்தலின் விளைவாக அரசதுறைக் கைத்தொழிலின்பங்கு குறைந்து வருதல்.

1980 – 67%
1998 – 10%

(6) மொத்த ஏற்றுமதியில் கைத்தொழிற்துறையின் பங்கு அதிகரித்துவருதல்

1977 – 14%
1987 – 49%
1998 - 75%

(7) கைத்தொழில் ஏற்றுமதிகளில் காணப்படும் அமைப்பியல் மாற்றம் மொத்த கைத்தொழில் ஏற்றுமதிகளில் :-

- உணவு குடிபானம் புகையிலையின் பங்கு குறைந்தமை

1970 – 19%
1980 – 6%
1998 - 69%

- புடைவை ஆடைகளின் பங்கு அதிகரித்தமை.

1970 – 9%
1985 – 58%
1998 – 69%

## இலங்கையின் கைத்தொழிற்துறை வளர்ச்சிக்கான காரணிகள்:-

1. இறக்குமதிப்பதிலீட்டுக் கைத்தொழிற் கொள்கையிலிருந்து ஏற்றுமதி நோக்கிய கைத்தொழிற் கொள்கைக்கு மாறியமை.

2. தனியார்துறையின் கைத்தொழில் முயற்சிகளுக்கு ஊக்குவிப்பு வழங்கியமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. வெளிநாட்டு முதலீடுகள் அதிகரித்தமை.

4. ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்கள் அமைக்கப்பட்டமை

5. இயந்திரங்கள் போன்ற முதலீட்டுப் பொருட்கள், மூலப்பொருள், இடைத்தரப் பொருளிற்கான **இறக்குமதித் தடைகள் நீக்கப்பட்டமை**, இறக்குமதி வரிகள் குறைக்கப்பட்டமை.

6. கைத்தொழிற்துறையில் ஏற்கனவே இருந்த இயலளவு பயன்படுத்தப்பட்டமை – **புதிய இயலளவு** உருவாக்கப் பட்டமை.

7. கைத்தொழில்துறையில் உற்பத்தியாற்றலை மேம்படுத்துவதற்காக 1997 – 2006 இனை **உற்பத்தித் தசாப்தமாக** பிரகடனப்படுத்தி ஊக்குவித்தமை.

## இலங்கையில் கைத்தொழிற்துறை *எதிர் நோக்கும் பிரச்சினைகள்*

1. கைத்தொழில்களில் முதலீடு செய்வதற்கு போதிய **மூலதன நிரம்பல் காணப்படாமை** ( உள்நாட்டு, தேசிய சேமிப்புக்கள் போதுமானவை அல்ல)

- எனவே **வெளிநாட்டுக் கடன்களையும் , முதலீடுகளையும்** பெற வேண்டியுள்ளது.

2. **உள்நாட்டுச்சந்தை சிறிதாக இருத்தல்.**

- எனவே வெளிநாட்டுச்சந்தை அவசியமாயிருத்தல்

3. வெளிநாட்டுச் சந்தைக்காக **குறைந்த செலவில் உயர்தரத்திலான** பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டியிருத்தல்.

4. இதற்காக **நவீனதொழில் நுட்பத்தையும், முகாமைத் துவத்தையும்** பயன்படுத்த வேண்டியிருத்தல்.

5. **ஏற்றுமதி நோக்குடைய கைத்தொழிலை** அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவை ஏற்படல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைத்தொழில் அபிவிருத்திக் கொள்கை வகுக்கும் போது கவனத்தில் கொள்ளும் அம்சங்கள்:-

1. தற்போது ஏற்றுமதி செய்யப்படுகின்ற பொருட்களின் **உள்நாட்டுக் கூட்டிய பெறுமதியை அதிகரித்தல்.**
- **ஆரம்பநிலைப்** பொருட்களை ஏற்றுமதி செய்வதைவிட **தயாரித்த பொருட்களை ஏற்றுமதி** செய்வது சிறந்ததாகும்.

உ-ம் உடன் தேநீர் தயாரிக்கும் சிறு பொதிகள்

2. **மூலப்பொருட்களை** உற்பத்தி செய்யும் உள்நாட்டுக் கைத்தொழில்களை வளர்ச்சியடையச் செய்தல்.

உ-ம் ஆடைக் கைத்தொழிலுக்குத் தேவையான துணி வகைகளை உற்பத்தி செய்தல்.

3. **பிரதேச அபிவிருத்திக்கு** கைத்தொழில் முக்கியமானதாக இருத்தல்.

## கைத்தொழில் தொடர்பாக பின்பற்றக்கூடிய கொள்கைகள் :-

1. ஏற்றுமதிப் பொருட்களின் **உள்நாட்டுக் கூட்டிய பெறுமதியை அதிகரிப்பதற்கான ஊக்குவிப்பு** வழங்குதல்
2. **சிறுகைத்தொழில்களிலும்,** **குடிசைக்** **கைத்தொழில்**களிலும் இனங்காணப்பட்ட விசேட **பிரச்சனைகளைத் தீர்த்தல்.**
3. **பிரதேச மட்டத்தில் கைத்தொழில் விரிவாக்கத்தை** அதிகரித்தல்.
4. கட்டுப்பாடுகள் குறைவானதும் கைத்தொழிலுக்கு **இணக்கமானதுமான பொருளாதாரச் சூழலை** ஏற்படுத்தல்.
5. **நிறுவன ரீதியான** வசதிகளைக் கூடுதலாக வழங்குதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ + ம் (i) கடன் வசதி
(ii) கீழ்க்கட்டமைப்பு வசதிகள்
(iii) கைத்தொழில் பேட்டைகள்
(iv) முதலீட்டுச் சபைகள்

## குடிசைக் கைத்தொழில், சிறுகைத்தொழில் என்பவற்றின் பொருளாதாரப் பங்களிப்பு:-

1. தொழில் வாய்ப்புக்களின் உருவாக்கம்
2. உள்நாட்டுச் சேமிப்புத் திரட்டல்
3. வறுமை ஒழிப்பு – வருமானப்பகிர்வு
4. பிராந்திய அபிவிருத்தி
5. ஊழியர்களுக்கும் , தொழில் முயற்சியாளர்களுக்குமான பயிற்சியளித்தல்.
6. முதலீடுகள் பெருகக்கூடிய சூழலை உருவாக்குதல்.
7. ஏற்றுமதி வருமானத்தைப் பெற்றுக் கொடுத்தல்

## ஆடைக் கைத்தொழிலின் பங்களிப்பு(1998 இல்)

* மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5%
- கைத்தொழிலில் கூட்டிய பெறுமதி 41%
* மொத்த ஏற்றுமதி வருமானத்தில் 52%
- மொத்த கைத்தொழில் ஏற்றுமதி வருமானத்தில் 69%
* தொழில் வாய்ப்பில் 9%

## கைத்தொழில் அபிவிருத்தி தொடர்பாகப் பயன்படுத்தப்படும் இரு உபாயங்கள்:-

(அ) இறக்குமதிப்பதிலீட்டுக் கைத்தொழில் மயமாக்கம்

(ஆ) ஏற்றுமதி நோக்கிய கைத்தொழில் மயமாக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (அ) இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில் மயமாக்கம்

"பாதுகாக்கப்பட்ட சந்தையில் இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்குப் **பதிலாக உள்நாட்டு உற்பத்திகளை உருவாக்கும் செயற்பாடு** இறக்குமதிப்பிரதியீட்டுக் கைத்தொழில் மயமாக்கம் ஆகும்"

* இது **உள்நாட்டுச்சந்தையை** மையமாகக் கொண்ட கைத்தொழிற் செயற்பாடாகும்.
* "**உள்நோக்கிய பொருளாதாரக் கொள்கை**" எனவும் இது அழைக்கப்படும்.
* இம்முறையின் கீழ் உருவாக்கப்படும் கைத்தொழில்கள்

  - செலவு கூடியவையாகவும்
  - தரம் குறைந்தவையாகவும் இருத்தல் கூடும்.

## இறக்குமதிப்பதிலீட்டுக் கைத்தொழில் மயமாக்கக் கொள்கைக்கு தேவைப்படும் பின்னணி.

நடைமுறையிலுள்ள உள்நாட்டுச் சந்தைக்காக பண்டங்களை உற்பத்தி செய்யும் இக் கொள்கை **பாதுகாக்கப்பட்ட சந்தையை அடிப்படையாகக்** கொண்டே செயற் படுத்தப் படுகிறது. அதாவது இறக்குமதிகளைக் - கட்டுப்படுத்தல் மூலமாக

உ+ம் :- அளவுக்கட்டுப்பாடு

- இறக்குமதிகளை முற்றாகத் தடை செய்தல்.
- உயர்ந்த இறக்குமதித் தீர்வைகள்

இவ்வாறு உள்நாட்டுப் பொருட்களுக்கு இறக்குமதிகளின் **போட்டியில்லாத** பாதுகாப்பான சந்தையை உருவாக்குதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இக்கொள்கை பற்றிய மதிப்பீடு / கருத்துரை

* ***இதன் அனுகூலங்கள்***

1. உள்நாட்டுக் கைத்தொழில் பொருட்களுக்கு உடனடிச்சந்தை கிடைக்கிறது.
2. குறிப்பிட்டநாடு பிறநாடுகளில் தங்கியிருத்தலைக் குறைக்கும்.
3. இறக்குமதிப்பதிலீட்டுச் செயற்பாடு மூலம் கைத்தொழில் மயமாக்கத்தை ஆரம்பிக்கலாம்.

❖ நீண்ட காலத்தில் இத்தகைய கொள்கையில் காணப்படக்கூடிய

***வரையறைகள் , குறைபாடுகளாவன:***

1. எய்தக் கூடிய கைத்தொழில் அபிவிருத்தியின் மட்டமும், வேகமும் **உள்நாட்டுச்சந்தையின் அளவிலும்** , அதன் **வளர்ச்சியிலும்** தங்கி யிருத்தல்

2. இறக்குமதிகளின் **போட்டியற்றநிலை** காணப்படல்.

3. உள்நாட்டுச்சந்தைக்கு மட்டும் உற்பத்தி வரையறுக்கப்படுவதால் பெரும்பாலான கைத்தொழில்கள் **திறனற்ற நிலையில்** காணப்படல் திறனின்மையின் அம்சங்களாவன.

   - **செலவு** கூடுதலாக இருத்தல்
   - பொருளின் **தரம்** குறைவாகவும் இருத்தல்

4. இறக்குமதி மூலப்பொருட்களில் தங்கியிருத்தலினாலும் ஏற்றுமதி நோக்கியதாக இல்லாதிருப்பதாலும் **சென்மதி நிலுவையில் சாதகமான தாக்கம்** ஏற்படுமெனக் கூறமுடியாது.

5. உள்நாட்டுச்சந்தை **சிறிதாக** இருக்குமளவுக்கு கைத்தொழில் **வளர்ச்சி** மட்டுப்படுத்தப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே குறிப்பிடப்பட்ட வரையறைகள், குறைபாடுகள் காணப்படுவதால் ஒருநாடு இறக்குமதிப்பதிலீட்டுச் செயற்பாட்டில் **தொடர்ச்சியாகத் தங்கியிருக்கக் கூடாது. குறிப்பிட்ட** காலத்தின் பின் **ஏற்றுமதி நோக்கியதாக** ஆக்கும்போது இக்குறைபாடுகளைக் குறைக்க முடியும்.

## (ஆ) ஏற்றுமதி நோக்கிய கைத்தொழில் மயமாக்கம்

**"வெளிநாட்டுச் சந்தையில் விற்கப்படக்கூடிய பொருட்களை** உற்பத்தி செய்யும் , **போட்டியுடன் கூடிய கைத் தொழில்களை** உருவாக்கும் செயற்பாடு ஏற்றுமதி நோக்கிய கைத்தொழில் மயமாக்கம் ஆகும்"

* இது **உலகசந்தையை** மையமாகக்கொண்ட கைத் தொழில் செயற்பாடாகும்.

* **"வெளிநோக்கிய பொருளாதாரக் கொள்கை"** எனவும் இது அழைக்கப்படும்.

* இம்முறையின் கீழ் உருவாகும் கைத்தொழில்கள்

- **குறைந்த செலவுடையவை**யாகவும் ( ஒப்பீட்டு நலன்கொண்டதாக)
- **தரமானவை**யாகவும் இருத்தல் வேண்டும்.

## ஏற்றுமதி நோக்கிய கைத்தொழில் உருவாக்கப்படுவதன் முக்கியத்துவம் / அவசியம்:-

**ஆரம்பத்தில்** - ஊழியச் செறிவுடையதாகவும்
- எளிமையான தொழில் நுட்பத்தைக்கொண்டும்

ஆரம்பித்து **காலப்போக்கில்** படிப்படியாக மிகவும் சிக்கலான பொருட்களை உற்பத்தி செய்ய முற்படுவதன் மூலம் **பலநன்மைகளைப்** பெற்றுக் கொள்ள முடியும் :-

1. **உள்நாட்டுச்சந்தை** சிறிதாக இருக்கின்றது. எனவே ஏற்றுமதிச் சந்தைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய அளவிற்குக் **கைத்தொழில்களை விரிவாக்கும் வாய்ப்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. சர்வதேச போட்டியின் கீழ் உற்பத்தி நடைபெறுவதால் கைத்தொழில் செயற்திறன் உடையதாக அமையும் எனவே செலவுகுறைந்த, தரம்கூடிய பொருள் கிடைக்கும்
3. இங்கு மிகை ஊழியம் காணப்படுகிறது எனவே ஊழியச்செறிவு காரணமாக உருவாகும் **தொழில் வாய்ப்பு** மிக அதிகமாக இருக்கும்.
4. மரபுரீதியான ஏற்றுமதி வருமானம் வீழ்ச்சியடைந்த நிலையில் **புதிய ஏற்றுமதிகளை ஊக்குவித்தல்** (ஏற்றுமதிப்பன்முகப்படுத்தல்)
5. புதியதொழில்நுட்ப முகாமைத்துவ அறிவைப் பெறல்.

## இவ் உபாயத்திலுள்ள பிரதிகூலங்கள் :-

1. உலகசந்தையில் **சார்ந்திருக்கும்** தன்மை ஏற்படுதல்
- உலக சந்தைத் தளம்பல்கள் உள்நாட்டில் உறுதி யின்மைக்கு வழிவகுக்கும்.
2. **பல்தேசியக் கம்பனிகளின் ஆதிக்கம்** அதிகரிக்கலாம்.
3. **பொருத்தமற்ற தொழில் நுட்பமுறையைப்** பின்பற்ற வேண்டியேற்படலாம்.
- மூலதனச் செறிவுடைய உற்பத்தி முறைகளால் வேலை வாய்ப்புக்கள் குறையக்கூடும்.

## சர்வதேச போட்டித்தன்மையான கைத் தொழில்களை உருவாக்க அரசு எடுத்த நடவடிக்கைகள்:-

இலங்கையின் கைத்தொழிற் கொள்கையானது உள்நாட்டுக் கைத்தொழில்களின் சர்வதேச போட்டித் தன்மையினை மேம்படுத்தும் **நோக்குடையதாக** இருத்தல் வேண்டும். இந்நோக்கத்தை அடைவதற்காக அண்மை ஆண்டுகளில் இலங்கை அரசு மேற்கொண்டு வந்துள்ள நடவடிக்கைகளாவன:

1. பொருளாதாரத்தைத் தாராண்மைப்படுத்தியமை
- அதாவது கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டமை.
2. வரிச்சலுகைகள் , வரிவிடுமுறைகள் வழங்கப்பட்டமை.
3. ஏற்றுமதிக் கடன்வசதிகள் வழங்கப்பட்டமை
4. ஏற்றுமதி அபிவிருத்திச்சபை உருவாக்கப்பட்டமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ஏற்றுமதியாளருக்கு ஜனாதிபதி விருது வழங்கப்பட்டமை.
6. ஏற்றுமதிச் சகாப்தம் (1992- 2001) பிரகடனப்படுத்தப்பட்டு ஏற்றுமதிக் கைத்தொழில்கள் ஊக்குவிக்கப்பட்டமை.

## ஏற்றுமதிச் செயல்முறைப்படுத்தும் வலயம் Export Processing Zone-EPZ

- 1978 இல் கொழும்பு பெரும்பாக ஆணைக்குழு அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து கட்டுநாயக்காவில் முதலாவது சுதந்திரவர்த்தகவலயமும் அமைக்கப்பட்டது.

1986 – பியகமவிலும்
1991 – கொக்கலவிலும்
1993 – மிகிந்தலவிலும்
1994 – பல்லேகலவிலும்
1998 – மல்வத்தை, மீரிகம
ஏற்றுமதிப்பதனிடல் வலயம் உருவாக்கப்பட்டது.

- 1990 இல் வெளிநாட்டு மதியுரைக்குழு, கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவுடன் இணைக்கப்பட்டது.
- இது 1992 இல் "முதலீட்டுச்சபை (BOI) எனப்பெயர் மாற்றம் பெற்றது. இச்சபையின் கீழ் முழுநாடும் ஒரு ஏற்றுமதி முறைப்படுத்தும் வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

## இதன் அனுகூலங்கள் :-

1. முதலீட்டுப் பற்றாக்குறையை குறைத்தல் - சென்மதி நிலுவைப்பிரச்சனையைத் தீர்த்தல்.
2. அந்நிய செலாவணி உழைப்பு அதிகரித்தல்.
3. வேலைவாய்ப்புக்கள் அதிகரித்தல்
4. உள்நாட்டு மூலப்பொருள் பயன்பாடு அதிகரிக்கும்.
5. பிராந்திய வளர்ச்சி ஏற்படும்
6. கைத்தொழிற்துறை வளர்ச்சியடையும்
7. உலகசந்தை வாய்ப்பு கிடைக்கும்
8. நவீன தொழில்நுட்ப முகாமைத்துவ அறிவு பெறப்படும்
9. வெளிநாட்டுதவியில் தங்கியிருக்கும் தன்மை குறையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பிரதி கூலங்கள் :-

1. முதலீட்டு இலாபங்கள் நாட்டைவிட்டு வெளியேறும்
2. பொருத்தமற்ற தொழில் நுட்பமுறை கையாளப்படலாம்
3. பல்தேசிய கம்பனிகளின் ஆதிக்கம் அதிகரிக்கும்
4. தொழிலாளர் வெளிநாட்டு முதலீட்டாளரால் சுரண்டப்படலாம்.
5. வெளிநாட்டு மூலப்பொருட்களில் தங்கியிருக்க நேரிடும்
6. சூழல் மாசடையும்.
7. வெளிநாட்டுச் சொத்துக்கள் அதிகரிப்பதால் பணநிரம்பல் அதிகரித்து பணவீக்கவிளைவுகள் தோன்றலாம்.

## இவற்றின் பங்கினை மதிப்பிடல்.

இலங்கையில் ஏற்றுமதிப்பதனிடும் வலயங்களின் பொருளாதாரப் பங்களிப்பினை பின்வரும் வழிகளில் மதிப்பிடலாம்.

1. வெளிநாட்டுச் செலாவணிச் சம்பாத்தியம்
2. வேலைவாய்ப்புக்கள் ( நேரடி, மறைமுக)
3. வெளிநாட்டு முதலீடு
4. தொழில்நுட்பம், முகாமை, ஊழியப்பயிற்சி என்பவற்றின் முன்னேற்றம்.

## புதிய கைத்தொழில் மயமாகும் நாடு (NIC) (New Industrialised Countries)

"வளர்முகநாடுகளில் தமது **துரிதமான பொருளாதார வளர்ச்சியினூடாக கைத்தொழில் துறையில் முன்னேறும் நாடுகளை** புதிய கைத்தொழில் மயமாகும் நாடுகள் எனலாம்"

இவற்றின் **பிரதான இயல்புகள்:-**

1. துரித பொருளாதார **வளர்ச்சிவேகம்** ( 8% - 10%)
2. **தலாவருமானத்தை** நடப்பு விலைகளில் 2000 அமெரிக்க டொலருக்கு மேலாக கொண்டிருத்தல்.
3. **சேமிப்பு, முதலீட்டுவீதம்** உயர்வாகக் காணப்படுதல் - முதலீட்டுவீதம் 30 **இற்கு** கூடுதலாக இருத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. **கைத்தொழில்துறையில் துரித வளர்ச்சி** காணப்படல் -மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஆக்கக் கைத்தொழில் உற்பத்தி **20%** இற்கும் கூடுதலாக இருத்தல்
5. ஏற்றுமதி **வருமானத்தில் கைத்தொழில் துறையின்** பங்கு உயர்வாகக் காணப்படுதல்.
6. **வெளிநாட்டு முதலீடு** பிரதான இடத்தை வகித்தல்.

# இலங்கையும் NIC அந்தஸ்தும்

NIC அந்தஸ்தை அடைவது தொடர்பாக இலங்கையின் நிலைமை:

1. பொருளாதார வளர்ச்சி வீதம் 1990 – 1998 வரை ஏறத்தாழ 5%
2. தலாவருமானம் 1998 இல் 837 அமெரிக்கடொலர்
3. முதலீட்டு வீதம் 1998 இல் - 25%
4. தயாரிப்புத்தொழில் மொ.உ.உ. இல் 1998 இல் - 22%
5. மொத்த ஏற்றுமதியில் கைத்தொழில் ஏற்றுமதி 1998 இல் 75%

*இவற்றின்படி:*

* **பொருளாதார வளர்ச்சி வீதம் , தலாவருமானம்** , முதலீட்டுவீதம் என்பவற்றின் அடிப்படையில் NIC அந்தஸ்த்தை இலங்கை எட்ட அதன் இடைவெளி உள்ளது.

* **தயாரிப்புத்துறை வளர்ச்சி** பேணப்பட்டுள்ளது.

* மொத்த ஏற்றுமதியில் கைத்தொழில்துறையின் பங்கு உயர்வாகவுள்ளபோதும் அவற்றின் **தேறிய சம்பாததியம்** குறைவாகவே உள்ளது. காரணம் அவை பெருமளவில் இறக்குமதி உள்ளீடுகளில் தங்கியிருப்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை NIC அந்தஸ்தை அடைவதி லுள்ள சிக்கல்கள் / வரையறைகள்

1. முதலீட்டு வீதத்ினை 30 வீதத்திற்கு மேலாக உயர்த்துவதற்கு சேமிப்பு முதலீட்டு இடைவெளியினை நிரப்புதல் வேண்டும் - தற்போது 25% ஆக உள்ள முதலீட்டு வீதத்தினை 30 வீதமாக உயர்த்துவதற்கு உள்நாட்டு சேமிப்பு மட்டத்தை உயர்த்துவதுடன், வெளிநாட்டு முதலீடுகள் உதவிகளைப் பெறவேண்டும்.

2. பொருளாதாரக் கீழ்க்கட்டுமானங்கள் போதியளவு இல்லா திருத்தல்.

   உ+ம் :- போக்குவரத்து தொலைத்தொடர்பு வசதிகள் மின்சாரம் , விமானத்தள துறைமுக வசதிகள்

3. நவீன தொழில்நுட்ப பயிற்சியும் திறனுமுள்ள ஊழியர் பற்றாக்குறை - இதற்கு மூன்றாம் நிலைக்கல்வி, அதிலும் குறிப்பாக தொழில்நுட்பக் கல்வியும் பயிற்சியும் குறைவாக இருத்தல்.

4. விவசாயத்துறையில் உற்பத்தித்திறன் குறைவாக இருப் பதும் அது மந்த கதியில் வளர்ச்சியடைவதும்.

## புதிதாக கைத்தொழில் மயமாகிய நாடு கள் சில :-

கிழக்கு ஆசியா:- சிங்கப்பூர் , தென்கொரியா , தாய்வான், கொங்கொங் ( இவை ஆசியாவின் புலிகள் Asian Tigers எனப்படும்.)
மேற்கு ஆசியா:- இஸ்ரவேல்
மத்தியஅமெரிக்கா:- மெச்சிக்கோ
தென்அமெரிக்கா:- ஆர்ஜென்ரினா, பிரேசில்
ஐரோப்பா:- கிரீஸ், போர்த்துக்கல், ஸ்பெயின், யூகோஸ் லாவியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைத்தொழில் மயமாவதிலுள்ள பிரதி கூலங்கள் :-

1. இயற்கை வளங்கள் அற்றுப்போதல்
2. சூழல் மாசடைதல்
3. வருமான ஏற்றத்தாழ்வு ஏற்படலாம்
4. இயந்திரமயப்படுத்தப்பட்ட மனித உழைப்பு உளவியலை பாதிக்கும்.

## கடந்த காலப் பரீட்சை வினாக்கள்

1. ஆசியாவில் 'புதிய கைத்தொழில் மயமாகும் நாடுகள் எனப்படுவது யாது, அவற்றின் அபிவிருத்திச் செயன் முறையில் முக்கியமான இயல்புகளை உம்மால் இனங் கண்டுகொள்ள முடியுமா?

(1997 புதிய)

2. (i) இலங்கையின் கைத்தொழில் அபிவிருத்தியின் பிரதான இயல்புகளை விபரிக்கவும்.

   (ii) இலங்கைப் பொருளாதாரம் தொடர்பாக, ஏற்றுமதிச் செயல் முறைப்படுத்தும் வலயங்களின் பங்களிப்பினை எவ்வாறு மதிப்பிடுவீர்?

(1997 பழைய)

3. (i) இலங்கையின் கைத்தொழிற் கொள்கையானது உள்நாட்டுக் கைத்தொழில்களின் சர்வதேச போட்டித்தன்மையினை மேம்படுத்தும் நோக்குடையதாக இருத்தல் வேண்டும். இந்நோக்கத்தை அடைவதற்கு அண்மை ஆண்டுகளில் இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுவந்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

   (ii) இலங்கையின் அபிவிருத்தி முயற்சியில் கைத்தொழில் ஏற்றுமதி ஊக்குவிப்பு ஏன் ஒரு முக்கிய விரகாகக் கருதப்படவேண்டும், உமது விடையை விளக்குக.

(1995)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. (i) புதிதாகக் கைத்தொழில் மயமாகும் நாடு (NIC) என்பதனால் கருதப்படுவது யாது?

(ii) 2000 ஆம் ஆண்டுக்கிடையில் இலங்கையானது புதியகைத்தொழில் மயமாகியநாடு எனும் அந்தஸ்தினைப் எய்துவதை நோக்காகக் கொண்டிருத்தல் வேண்டும் என்ற கூற்றுப் பற்றிக் கருத்துரைக்குக.

(1994)

5. பின்வருவனவற்றுடன் தொடர்புபடுத்தி இலங்கையின் கைத்தொழிற்துறை பற்றி சிறுகட்டுரை ஒன்று எழுதுக.

(i) கைத்தொழிற்துறையின் அமைப்பு
(ii) தேசிய உற்பத்திக்கு அதன் பங்களிப்பு
(iii) தொழில் வாய்ப்பு
(iv) ஏற்றுமதி உழைப்பு

(1992)

6. (i) அண்மை ஆண்டுகளில் இலங்கையின் கைத்தொழிற்துறையில் ஏற்பட்ட முக்கியமான மாற்றங்கள் யாவை?

(ii) இம்மாற்றத்திற்கு ஏதுவான காரணிகள் யாவை?

(1991 விசேட)

7. (i) கடந்த பத்து ஆண்டுகளில் இலங்கையின் கைத்தொழிற்துறையின் சார்பளவான முக்கியத்துவம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறத்தாழ 14 – 15 சதவீத மட்டத்தில் மாறாதுள்ளது. இக்கூற்றிலிருந்து நீர் செய்யக்கூடிய முடிவு யாது?

(ii) இலங்கையின் கைத்தொழிற் துறையின் சேர்க்கை பற்றியும் , அதன் பிரதான இயல்புகள் பற்றியும் சுருக்கமாக விபரிக்குக.

(1989)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VI

# கிராமிய அபிவிருத்திக் கொள்கைகள்

**கிராமிய அபிவிருத்தியின் முக்கியத்துவம்:-**

1. இலங்கையின் **சனத்தொகையில் பெரும்பகுதியினர்** கிராமியப் பிரதேசங்களில் வாழ்தல். (72%)

2. **குறைந்த வருமானம் பெறுவோரில் பெரும்பகுதியினர்** கிராமியப் பிரதேசங்களில் வாழ்தல்

3. **சமூகப் பொருளாதாரப் பொது வசதிகள்** கிராமியப் பகுதிகளில் அபிவிருத்தியடையாத நிலையில் காணப்படுதல்

   உ+ம் பெருந்தெருக்கள், மின்சாரம் , தொலைபேசி, சுகாதாரம்.

## கிராமிய அபிவிருத்தியுடன் தொடர்புபட்ட பிரச்சினை

வளங்களைப் **பகிர்ந்து ஒதுக்கீடு செய்வது** நகரப்பகுதிகளுக்குக் கூடுதலாகவும் , கிராமப் புறங்களுக்கு குறைவாகவும் இருத்தல்.

## கிராமிய அபிவிருத்திக் கொள்கைகள்:-

1. கிராமங்களில் **பொருளாதார, சமூக அமைப்புக்களை** உருவாக்குவதற்கு ஒத்துழைப்புக்களை வழங்குதல்

   உ+ம் :- உற்பத்தி அமைப்புக்கள், கூட்டுறவு அமைப்புக்கள், கடன் வழங்கும் சங்கங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பொருளாதாரப் பொது வசதிகளை அபிவிருத்தி செய்தல்

உ_+ம் :-பாதைகள்,மின்சாரம், தொலைத் தொடர்புச்சேவை.

3. சமூகப்பொது வசதிகளை அபிவிருத்தி செய்தல்

உ_+ம் :- கல்வி , சுகாதாரவசதி , சுத்தமான்நீர் ,
சுகநலவியல் சேவைகள்.

4. கிராமியக் கடன்வசதிகளை முன்னேற்றுதல்

உ_+ம் - இசுறுகடன் திட்டம்
- சுரதுர கடன் திட்டம்

5. சிறிய குடிசைக் கைத்தொழில்களை முன்னேற்றுவதற்கு ஊக்குவிப்பு வழங்குதல்

## ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித்திட்டம்

இத்திட்டம் 1979 ஆம் ஆண்டு குருநாகல் மாவட்டத்தில் உலகவங்கியின் நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்டது.

* தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் விவசாயம், கைத்தொழில் . சுகாதாரம் , கல்வி, வீடமைப்பு, கலாசாரம் போன்ற பல்வேறு துறைகளில் ஒருங் கிணைந்த அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள் ளுதலே இத்திட்டமாகும்.

* *இதன் நோக்கங்கள் :-*

1. வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல்
2. நவீன விவசாயமுறைகளை அறிமுகம் செய்தல்
3. சிறு ஏற்றுமதிகளை ஊக்குவித்தல்
4. சிறுகுளங்களை புனருத்தாரணம் செய்தல்
5. உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்தல்.
6. உள்நாட்டு முயற்சிகளை ஊக்குவித்தல்
7. பிரதேச ரீதியாக சமவளர்ச்சியை ஏற்படுத்தல்
8. கிராமிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தல்

* 1989 இலிருந்து கிராமப்பகுதிகளில் தொழில் வாய்ப் பிலும், வருமானத்தை ஏற்படுத்துவதிலும் தனியார் துறையின் ஈடுபாட்டிலே கவனம் செலுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* 1998 இல் நாட்டிலுள்ள 15 மாவட்டங்களில் இத்திட்டம் நடைமுறையிலிருந்தது.

## கிராமியக்கொடுகடன்

கிராமிய விவசாயிகள் பின்வரும் காரணங்களால் கடன் பெற வேண்டியுள்ளனர்:-

1. கிராமியத்துறையில் உற்பத்தித்திறனும் , வருமானமும் குறைவு - இதனால் சேமிப்பும் குறைவாகும்.
2. உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள கடன் பெற வேண்டியுள்ளது.
3. உற்பத்திக்கும் - அறுவடைக்குமிடைப்பட்ட காலத்தில் நுகர்விற்காகவும் கடன் பெறவேண்டியுள்ளது.

## கிராமியக்கடன் மூலங்கள்

இருவகை

1. *நிறுவன ரீதியான / முறைசார்ந்த கடன்மூலங்கள்:*

   i) வணிகவங்கிகள் - இலங்கைவங்கி, மக்கள்வங்கி ஹற்றன் நாசனல் வங்கி
   ii) கூட்டுறவுச்சங்கங்கள் - கூட்டுறவுக்கிராமிய வங்கிகள், சிக்கன்கடன் கூட்டுறவுச்சங்கங்கள்
   iii) ஜனசக்திவங்கி, சமுர்த்தி வங்கி
   iv) பிரதேசகிராமிய அபிவிருத்தி வங்கிகள்

2. *நிறுவனரீதியற்ற / முறைசாராகடன் மூலங்கள்:*

   i) கடன்வழங்குவதைத் தொழிலாகக் கொண்டிருப்போர்
   ii) கடன் வழங்குவதை உபதொழிலாகக் கொண்டிருப்போர்
   iii) நிலப்பிரபுக்கள்
   iv) நண்பர்கள், உறவினர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமியக்கடன் பிரச்சினை

*(கடன் பெறவேண்டியிருப்பதற்கான காரணங்களைக் குறிப்பிடுக..)*

- கிராமிய விவசாயிகள் **நிறுவனரீதியான மூலங்களி லிருந்து போதியளவு கடன்களைப்பெறமுடியாம லிருப் பதே** கிராமியக்கடன் பிரச்சினையாகும்.
- கிராமிய விவசாயிகள் நிறுவனரீதியான மூலகங்களி லிருந்து கடன்களைப்**பெறுவதிலும்** - நிறுவனரீதியான மூலங்கள் கடன்களை **வழங்குவதிலும் பிரச்சினைகள்** எதிர்நோக்கப்படுகின்றன.

## கடன் பெறுவதிலுள்ள பிரச்சினைகள்:-

1. வங்கிகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய **பிணைகள்** விவ சாயிகளிடம் இல்லாதிருத்தல்.
2. வங்கிகளிடம் கடன்பெறுவதில் பின்பற்றும் விதிகளை **விளங்கிக்கொள்ளக்** கூடிய கல்வியறிவு விவசாயிகளிடம் இல்லாதிருத்தல்
3. கடன்களைப்பெறுவதில் உள்ள **காலதாமதம்**
4. கடன்பெறுவோரின் **வருமானங்கள்** போதியதாக இல்லாதிருத்தல்.
5. கிராமப்புறங்களில் **போதியவங்கிகள்** உருவாக்கப் படாமை

## *கடன்வழங்குவதில் உள்ள பிரச்சினைகள்;*

1. வங்கிகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய **பிணைகள்** விவ சாயிகளிடம் இல்லாதிருத்தல்.
2. கடனிற்கான நிர்வாகச்செலவு உயர்வாக இருத்தல் - எனவே இச்சிறுகடன்களை வழங்குவது இலாப கரமானதாக இல்லாமை.
3. விவசாயத்துறையின் **வருமானம் நிச்சமற்றதாக** காணப்படுவதால் கடனை மீளப்பெறுவதில் ஆபத்து அதிகமாகக் காணப்படுதல் - **மீளளிக்கப்படாத கடன்** உயர்வாக இருத்தல்
4. பொருத்தமான **கண்காணிப்பு முறையினை** உரு வாக்க முடியாதிருத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❁ எனவே **முறைசாராத்துறையிலிருந்து உயர்வட்டி** வீதங்களில் கடன்பெறுவதனால் அதனைத் திருப்பிச் செலுத்த முடியாதநிலையில் **கடன்சுமையில்** கிராமிய விவசாயிகள் **மூழ்கியுள்ளனர்.**

## மீளளிக்கப்படாத கடன்

❁ மீளளிக்கப்படாத கடன் இலங்கையின் கிராமியக் கடன் திட்டத்தின் **பண்பாக** விளங்குகிறது

❁ கிராமத்துறையிலான சிறு உற்பத்தியாளர்களுக்குக் வர்த்தக வங்கிகளினால் வழங்கப்படும் கடன்களின் மீளப்பெறமுடியாமை உயர்வீதத்தில் இருப்பதற்குப் பங்களிப்புச்செலுத்தும் **காரணிகள்:**

1. கடன்கள் வழங்கப்பட்டபின்னர் தொடர்ந்து நடவடிக்கை எடுப்பது போதாமையினால் முறையாக **வழிகாட்டி மேற்பார்வை செய்வதில் பற்றாக்குறை** காணப்படுகின்றமை.

2. அரசவங்கிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளும் கடன்களை ஒருவகை **மானியமாகக் கருது கின்ற நிலையும்,** ஒரு கடன் **கலாச்சாரம் இல்லா மையும்.**

எனவே தான் "கிராமத்து வறியமக்களுக்குக் கடன் வழங்கு வது கொடுக்கல் வாங்கல் **செலவுகள் நிறைந்த ஆபத்தான ஒரு செயல்** என வர்த்தகவங்கிகள் கருதுகின்றன"

**மீளளிக்கப்படாத கடன் உயர்வீதத்தினைக் குறைப்பதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகள்:**

1. கடனை மீளச் செலுத்தக்கூடிய **ஆற்றலை விருத்தி** செய்யக் (வருமானத்தை உயர்த்த) கூடிய நடவடிக்கை களை மேற்கொள்ளல்:

உ+ம்:
- தொழில் வழிகாட்டல், ஆலோசனை வழங்குதல்
- உற்பத்திப்பொருட்களை-சந்தைப்படுத்து வதற்கான வழிமுறைகளை ஏற்படுத்தல்
- காணிப்பங்கீடு, நிலமற்றோருக்கு நிலம் வழங்குதல்
- ஒ.கி.அ.திட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. கடன் வழங்கப்பட்ட பின்னர் தொடர்ந்து **மேற்பார்வை** செய்தலும், நடவடிக்கைகளின் **முன்னேற்றத்தைக் கண்காணித்தலும்**

3. **கூட்டாகக் கடன்** வழங்கும் முறைமையைப்பின்பற்றல் - அதாவது விவசாயிகளைக் குழுக்களாகப்பிரித்து கூட்டாகக் கடன் வழங்குதல் - இங்கு மீளச் செலுத்து வதற்குக் கூட்டுப்பொறுப்பு உண்டு.

4. சிறு விவசாயிகதளுக்கு நேரடியாகக் கடன் வழங்கு வதில் வங்கிகள் தோல்வியுற்றுள்ளன – எனவே **முகவர்களினூடாக** வங்கிக்கடனை வழங்குதல்

5. அரசாங்கக் கடன்கள் ஒரு மானியமாகக் கருதப்படுகின்ற மனப்பாங்கை **மாற்றுதல்**

## வறியோருக்கான கடன் வழங்கும் முறைகள்

- "கிராமத்து வறியமக்களுக்கு கடன் வசதிகளை வழங்குவதற்கு மரபுசார்ந்த முறைகளையன்றிப் **புதிய** முறைகளைக் கையாள வேண்டியது அவசியமாகும"
- வறியோரின் கடன் தேவைகளை நிறைவேற்றுவதற்கு அபிவிருத்தி நிறுவனங்கள் (அரசாங்கத்துறை சார்ந்தனவும், அரசாங்கத்துறை சாராதனவும்) அண்மைய ஆண்டுகளில் கையாண்டுள்ள புதிய முறைகள்:

1. தெரிவு செய்யப்பட்ட **வறியமக்களைக்கொண்டு** அமைக்கப்படுகின்ற குழுவானது, அதன் சேமிப்பை அடிப்படையாகக்கொண்டு **அங்கத்தவர்களுக்கு** கடன் **வழங்கும் முறை** உ+ம் - சனசக்தி வங்கி
   - சமுர்த்தி வங்கி
   - சிக்கனகூட்டுறவுச்சங்கங்கள்

2. **நிலம்** அற்றவர்கள், **சிறுநிலவிவசாயிகள்** ஆகியோருக்கு சலுகைக்கடன் வழங்கப்படுகின்ற முறை

- **இசுறு** கடன் திட்டம் (1989)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. படித்த வேலையற்ற இளைஞர்சுயதொழிலைத் தொடங்கு வதற்கான சிறியதொழில்முயற்சிக்கடல் சுரதுர திட்டம் (1996)

**அரசின் கிராமியக்கடன் உபாயம்/ கொள்கை.**

- **அரசநிதியிடப்பட்ட** கிராமியக் கொடுகடன் திட்டங் களில் இருந்து மக்களை அடிப்படையாகக் கொண்ட **சுயநிதியிடல் கொடுகடன் திட்ட முறைக்கு** படிப்படியாக நகருதல்

உ+ம் :- மீள்நிதியிடலிற்கு பதில் வட்டி உதவுதொகை வழங்குதல் :- இசுறுகடன் திட்டம்
:- சுரதுர கடன் திட்டம்

2. அபிவிருத்தி சேமிப்பு வங்கிகளை உருவாக் குமாறு தனியார்துறையை ஊக்குவித்தல்
உ+ ம் சசன அபிவிருத்தி சேமிப்பு வங்கி
பிரமுக அபிவிருத்தி சேமிப்பு வங்கி
சிலிங்கோ அபிவிருத்தி சேமிப்பு வங்கி

3. பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளை மாகாண அடிப்படையில் ஒன்றிணைத்து பிரதேச அபிவிருத்தி வங்கிகளை " நிறுவியமை

## முகவர் வங்கித்தொழில்

- 1988 ஆம் ஆண்டில் **இலங்கை வங்கி, மக்கள் வங்கி** என்பன கிராமியப் பணவழங்குனர்களைத் தமது முகவர்களாக நியமித்து, அவர்களுக்கு மீளக்கடன் வழங்குவதற்காக கடன்வழங்கியது.
- இம்முகவர்கள் **இலகு நிபந்தனைகளில்** முறைசாராத் துறையின் வட்டிவீதங்களைவிடக் **குறைந்த வட்டி** விதத்தில், **குறைந்தபிணை**களுடன் கடன் வழங்கு கின்றனர்.

## கூட்டுறவுக்கிராமிய வங்கி

- அரசுடமையாக விளங்கும் **மக்கள்வங்கி** **கூட்டுறவுத் திணைக்களத்துடன்** இணைந்து 1964 இல் கூட்டுறவுக் கிராமிய வங்கியை ஆரம்பித்தது
- இது அமைக்கப்பட்டதான **பிரதான நோக்கங்கள்**

1. கிராமியச் **சேமிப்புக்களைத்**திரட்டுதல்
2. கிராமியத்துறைக்கு **கொடுகடன்களை** வழங்குதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ இவை கிராமியச் சேமிப்புக்களைத் திரட்டுவதிலும் பார்க்க **குறைந்தளவையே** கிராமியத்துறைக்கு **கடனாக** வழங்குகின்றன. எனவே இது தனது **முதன்மை நோக்கத்தில்** தோல்வி கண்டுள்ளது எனலாம். எனவே "இவை திரட்டும் கிராமியச் சேமிப்புக்களை மக்கள் வங்கியினூடாக **நகரத்துறைக்கு இடம்மாற்றி விடுகின்றன"** எனக் குறைகூறப்படுகின்றது.

## பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் Regional Rural Development Banks - RRDB

❖ **மத்தியவங்கியினால்** வழங்கப்பட்ட மூலதனத்துடன் ஏற் படுத்தப்பட்ட பி.கி.அ வங்கிகள் 1985**இல்** தொழிற்படத் தொடங்கின.

❖ இவை கிராமியத்துறையிலிருந்து சேமிப்புக்களைத் திரட்ட வேண்டியவையாகவும் அந்நிதிகள் அதே **துறையில் பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்த** வேண்டியவை யாகவும் இருந்தன - இதனால் இவற்றின் நடவடிக்கைகள் அவை அமைந்திருந்த **மாவட்டங்களுக்கே** மட்டுப் படுத்தப்பட்டிருந்தன

❖ 1997 இன் இறுதியில் பி.கி.அ வங்கிகளின் எண்ணிக்கை 17இற்கு வளர்ந்ததுடன் 175 கிளைகளையும் கொண் டிருந்தன.

❖ "மாவட்டங்களை அடிப்படையாக்கொண்ட இவை **பிரதேச அபிவிருத்தி வங்கிகளாக"** **மாகாண அடிப்படையில்** ஒருங்கிணைக்கப்படுவதன் மூலம் வலுப்படுத்தப்படுகின்றன.

## பிரதேச அபிவிருத்தி வங்கிகள் (Regional Development Banks- RDB)

❖ 1997 **இன்** 6ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கிகள் சட்ட ஏற்பாடுகளுக்கமை 1998 **இல்** பி. அ. வங்கிகள் உருவாக்கப்பட்டன.

❖ மாவட்டங்களை அடிப்படையாகக் கொண்ட பி. கி. அ. வங்கிகளை மீளமைத்து ஒன்றிணைப்பதன் மூலம் **மாகாண அடிப்படையில்** இவை நிறுவப்படுகின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை சிறப்பியல்புவாய்ந்த **வங்கிகளாகும்** எனவே மத்தியவங்கியின் கண்காணிப்பிற்குட்பட்டவையாகும்

- ருகுணு, சப்ரகமுவ, இராசரட்டை அபிவிருத்தி வங்கிகள் 1998 இல் தொழிற்படத்தொடங்கின.
- **இலங்கை மத்தியவங்கி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி, ஊழியர் சேமநிதியம்** என்பவற்றால் மூலதன மிடப்பட்டுள்ளன.
- இவற்றின் **பணிகள்**

1. பிரதேசத்திற்குள்ளேயும் வெளியேயும் **வைப்புக்களைத் திரட்டுதல்**
2. நலிவடைந்த பிரிவினருக்கு உதவுவதற்காக பிரதேச **அபிவிருத்தித்**திட்டங்களுக்கு **கடன்** வழங்குதல்

## அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம்

- 1967இல் புதிய **விவசாயக்கடன் திட்டம்** உருவாக்கப் பட்டது.

  - இது **1973இல்** அ.உ.கி.கொ. திட்டம் என அறிமுகப்படுத்தப்பட்டது.

- இது கிராமியத்துறையின் **எல்லாக் கடன்தேவைகளையும்** ஒருங்கே பூர்த்திசெய்யமுயற்சித்தது.
  - இதன் **கீழ்** நெல், உப உணவுப்பொருட்கள் என்ப வற்றின் உற்பத்திக்கு கடன் வழங்கப்பட்டது.

- இதில் **இலங்கை வங்கி,** மக்கள் **வங்கி,** **ஹற்டன் நாஷனல்வங்கி** என்பன பங்குபற்றின.
- **இதன்வட்டிவீதம் மிகவும் குறைவு**

- கடனைப்பெற்றோர் மீளச்செலுத்துதலும் குறைவு. இதனால் மத்தி வங்கி இவ்வங்கிகளுக்கு **மீள்நிதியிடல்** வசதிகளை வழங்கி வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய அணைத்தை உள்ளடக்கிய கிராமியக் கொடு கடன்திட்டம்

- 1973இல் அறிமுகப்படுத்தப்பட்ட அ. உ.கி. கொ. திட்டத்தில் சில மாற்றங்களுடன் 1986ல் பு. அ. உ. .கி. கொ. திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இரு திட்டங்களுக்குமான **வேறுபாடுகள்**

1. முன்னையது ஒவ்வொரு பயிர்ச்செய்கைக் காலத்திற்கும் விண்ணப்பிக்கவேண்டும் - புதியதில் ஒரு தடவை விண்ணப்பித்தால் - **6 போகத்திற்கு** அல்லது 3 வருடங்களுக்கு கடனைப்பெறலாம்.
2. முன்னையதில் ஒரே பயிருக்கு கடன் வழங்கப்பட்டது – புதியதில் **வேறுபயிருக்கு மாறி** கடன்பெற முடியும்
3. முன்னையதி வங்கிகள் முழுமையாக கடன் வழங்கின – புதியதில் வங்கிகள் 75% தையும் **மிகுதியை சிக்கன கூட்டுறவுச்சங்கங்களும்** வழங்கின இதனால் கடன் பார்வையும் மீளப்பெறுவதில் அக்கறையும் காணப்பட்டது.

- இத்திட்டத்தில் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, ஹட்டன் நாஷனல் வங்கி, **பீ.கி.அ. வங்கி,** என்பன பங்கு பற்றின.
- மீளச்செலுத்தாத கடன்களுக்கு மத்தியவங்கி மறுநிதி யீட்டம் செய்தது.

  - **1994இலிருந்து** மீள்நிதியீட்டம் நிறுத்தப்பட்டது வங்கிகள் தமது சொந்த நிதியிலிருந்தே கடன்களை வழங்கின. **அரசாங்கம் வட்டி உதவுதொகை** வழங்கியது.

## முறைமை சாரா / நிறுவனரீதியற்றகடன்

- கிராமியத்துறைக்கு கிடைக்கும் கடன் வசதிகளை முறைசார்ந்த நிதித்துறை விரிவுபடுத்தியுள்ள போதும், மேற்படித்துறை தனது கடன் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு இன்றும் **முறைசாரா மூலங்களிலேயே பெருமளவிற்குத் தங்கியுள்ளது.**
- கிராமியத்துறையினர் முறைசாராக் கடன்களை அதிகளவில் பெறுவதற்கான **காரணங்கள்:**

1. இலகுவாகவும் துரிதமாகவும் கடன்களை பெறமுடிதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பகுதி பகுதியாகவும் துரிதமாகவும் கடன்களை பெற முடியும்
3. பிணைகள் இன்றியும் துரிதமாகவும் கடன்களை பெறமுடியும்
4. நுகர்வுக்காகவும் துரிதமாகவும் கடன்களை பெறமுடியும்
5. மூலப்பொருட்கள் சேவைகள் வடிவிலே பெற்று விளைபொருள்வடிவிலே செலுத்த முடிதல்
6. நிறுவனரீதியாக பெற்ற கடனை மீளச்செலுத்தாமையால் மீண்டும் அவற்றிடம் கடன் பெறத்தகுதியில்லாதவராதல்

❀ முறைசாராக்கடன்களின் **பொருளாதார விளைவுகள்:**

1. **உயர்வட்டிவீதம்** நிலவுகிறது(50% - 100%வரை) எனவே உயர்வட்டிவீதம் → குறைந்தளவு கடன்பெறல் → குறைந்தளவு சாதனப்பயனடைதல் → குறைந்த உற்பத்தித்திறன் → **குறைந்த வருமானம்**
2. வர்த்தகர்களிடம் கடன்பெறுவதால் அவர்களிடம் உள்ளீடுகளையும் உயர் விலையில் பெறுவதால் உற்பத்திச் செலவு அதிகமாகும்.
3. விளைபொருட்களையும் அவர்களுக்கே விற்கநேரிடுவதால் குறைந்த விலை பெற வேண்டியுள்ளது
4. இவற்றின் காரணமாக குறைந்தளவு வருமானம் பெறவேண்டியிருப்பதால் கடனைச்செலுத்த மீளக்கடன் பெறும் **கடன்பொறி** / **கடன் சுமைக்கு**ள் சிக்க நேரிடுகிறது.

## கடந்தகாலப்பரீட்சை வினாக்கள்

1. இலங்கையிலுள்ள ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தித்திட்டங்கள் பற்றிச் சுருக்கமாக மதிப்பீடு செய்க.

(1992)

2. கிராமத்துறையிலான சிறு உற்பத்தியாளர்களுக்கு வர்த்தகவங்கிகளால் வழங்கப்படும் கடன்களின் 'மீளப்பெறமுடியாமை' உயர்வீதத்தில் இருப்பதற்குப் பங்களிப்புச் செலுத்தும் காரணிகள் எவை?
   i) பொதுவாக கிராமிய சிறு உற்பத்தியாளர் நம்பத் தகாதவர்களாக இருத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii) கடன்கள் வழங்கப்பட்ட பின்னர் தொடர் நடவடிக்கை எடுப்பது போதாமையினால், முறையாக வழிகாட்டி **மேற்காட்டி மேற்பார்வை செய்வதில் பற்றாக்குறை** காணப்படுகின்றமை.

iii) பொதுவாக கிராமிய பொருளாதார நடவடிக்கைகள் மிக இலாபகரமானதாக அமைவதில்லை.

iv) அரசவங்கிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளும் கடன்களை ஒருவகை மானியமாகக் கருதுகின்ற நிலைமையும், ஒரு கடன்கலாச்சாரம் இல்லாமையும்

(1998புதிய – பகுதிI)

3. இலங்கையின் கிராமியக்கடன்திட்டத்தின் பண்பாக விளங்கும் மீளளிக்கப்படாத கடன் உயர்வீதத்தினைக் குறைப்பதற்கு உங்கள் நியாயத்தின்படி பிரயோகிக்கூடிய நடவடிக்கைகள் எவை?

(1998 பழைய)

கிராமியத்துறைக்குக் கடன்வழங்குதலில் ஏற்படும் பிரதான பிரச்சனைகளை விளக்கவும்

(1997பழைய)

5. கிராமியத்துறைக்குக் கிடைக்கும் கடன் வசதிகளை முறைசார்ந்த நிதித்துறை விரிவுபடுத்தியுள்ள போதும் மேற்படித்துறை தனது கடன்தேவையைப் பூர்த்தி செய்வதற்கு இன்றும் முறைசாரா மூலங்களிலேயே பெருமளவிற்குத் தங்கியுள்ளது.

i) கிராமியக்கடன்களை வழங்குவதில் முறைசார்ந்த நிறுவனங்கள் எதிர்நோக்கிய பிரச்சனைகள் யாவை?

ii) முறைசாராத்துறைக்கு கடன்களில் தங்கியிருப்பதன் பொருளாதாரவிளைவுகள் யாவை?

iii) வறியோரின் கடன் தேவைகளை நிறைவேற்றுவதற்கு அபிவிருத்தி நிறுவனங்கள் (அரசாங்கத்துறை சார்ந்தனவும், அரசாங்கத்துறை சாராதனவும்) அண்மைய ஆண்டுகளிற் கையாண்டுள்ள புதிய முறைகள் யாவை?

(1996)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. "கிராமத்து வறியமக்களுக்குக் கடன்வழங்குவது கொடுக்கல் வாங்கல் செலவுகள் நிறைந்த ஆபத் தான ஒரு செயல் - என வர்த்தகவங்கிகள் கருது - கின்றன" "கிராமத்து வறியமக்களுக்குக் கடன் வசதிகளை வழங்குவதற்கு மரபுசார்ந்த முறைகளையன்றிப் புதிய முறைகளைக்கையாளவேண்டியது அவசிய மாகும்"என அடிக்கடி கூறப்படுகிறது"

மேலே தரப்பட்டுள்ள இரு கூற்றுக்களையும் தொடர்புபடுத்தி இலங்கையின் கிராமியக்கடன் பிரச்சினையை நுணுக்கமாக ஆராய்க.

(1994)

7. இலங்கையில் நிலவும் கிராமியக்கடன் பிரச்சினையின் இயல்பினையும் அதனைத்தீர்ப்பதற்கென சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரதான வழிமுறைகளையும் பரிசீலனை செய்க.

(1992)

8. 'முறைசாராக் கொடுகடன் மூலங்கள்' பற்றி விளக்கக் குறிப்புரைகள் எழுதுக.

(1990 விசே)

9. 1986இல் நடைமுறைக்குவந்த பதிய விரிவான கிராமியக்கடன்திட்டத்தில் இடம்பெற்றுள்ள புதிய மூலதத்துவங்கள் யாவை?

(1988)

10. i) "முற்பணங்களுக்கு மேலாக வைப்புக்கள் மிகைநிலை பெற்றிருத்தல் அண்மை ஆண்டு களில் இலங்கையில் கிராமிய வங்கிகளில் அவதானிக்கக் கூடிய ஒரு முக்கிய இயல் பாகும்" கிராமிய வங்கிகளின் தொழிற் பாடுகள் பற்றி இக்கூற்றின் அடிப்படையில் நிர் வழங்கக் கூடிய கருத்துரைகள் யாவை?

ii) இலங்கையில் சிறுவிவசாயிகளினால் பயன் படுத்தப்படும் கடன்களின் பெரும் பகுதியை. முறைமை சாரா மூல்ங்கள்வழங்கிவந்துள்ளன. முறை மைசார் மூலங்களிலிருந்து பெற்றுக்கொள் வதிலும் பார்க்க, முறைமை சாரா மூலகங்களி லிருந்து கடன்பெறுதலின் பொருளாதார விளைவு கள் யாவை?

(1987)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VII

# கீழ்க்கட்டமைப்பு அபிவிருத்திக் கொள்கைகள்

*(கீழ்க்கட்டமைப்பு/ உட்கட்டமைப்பு/ பொதுவசதிகள்/ சமூகப்பொருளாதாரப்பொதுப்பணி மூலதனம்)*

"பொருளாதாரமொன்றின் உற்பத்தி நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த அவசியமான அடிப்படை வசதிகள் கீழ்கட்டமைப்பாகும்"

## கீழ்கட்டமைக்கப்பின் வகைகள்

அ) பொருளாதாரக்கீழ்க்கட்டமைப்பு/பொதுப்பணி வசதிகள்

ஆ) சமூகக் கீழ்மட்டக்கட்டமைப்பு/பொதுப்பணி வசதிகள்

அ) **பொருளாதாரப் பொதுப்பணிகள் - உதாரணங்கள்:**

"உற்பத்தி நடவடிக்கைகளை இலகுவாக்கும் அடிப்படை வசதிகள் பொருளாதாரக் கட்டமைப்பாகும்"

உ + ம் : போக்குவரத்து, பெருந்தெருக்கள்,
துறைமுகம், விமானத்தளம்,
அஞ்சல், தொலைத்தொடர்பு,
நீர்ப்பாசனம், மின்சாரம்

## பொருளாதார உட்கட்டமைப்பின் முக்கியத்துவம்

1. உற்பத்திச்செலவைக் குறைக்கலாம்
2. நேரத்தைக்குறைக்கலாம்
3. தனியார் துறையை உற்பத்தியில் ஊக்குவிக்கலாம்
4. உள்நாட்டு முதலீட்டைத்தூண்டலாம்
   - வெளிநாட்டு முதலீட்டைக் கவரலாம்
5. உற்பத்தித்திறனை அதிகரிக்கலாம்

இவற்றின்மூலம் உற்பத்தியை அதிகரித்து, பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தியை அடையலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஆ) சமூகப்பொதுப்பணி வசதிகள் - உதாரணங்கள்:

"மனித தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற சமூகநலனை அதிகரிக்கின்ற கல்வி, சுகாதார மருத்துவ வசதி, வீட்டு வசதி போன்ற அடிப்படை வசதிகள் சமூகக் கீழ்க்கட்டமைப்பாகும்

உ+ம் பாடசாலைக் கட்டிடங்கள் உபகரணங்கள், தொழிற் பயிற்சிக்கான வசதிகள், வைத்தியசாலை

சமூகப்பொதுப்பணி வசதிகளை அரசு வழங்குவதன் நோக்கம்

1) மனித மூலதனத்தை உருவாக்குதல்
2) சமூக நலன்களை அதிகரித்தல்.




# பொதுப்பண்டங்களிற்கும் - கீழ்க்கட்டமைப்புக்குமான ஒற்றுமைகள்

- வெளிவாரநன்மையைக்கொண்டிருத்தல்
- கூட்டாக நுகரப்படுதல்

## வேறுபாடு

- பொதுப்பண்டங்களில் **விலை/கட்டணம்** அறவிட முடியாது எனவே **அரசே** அவற்றை வழங்கவேண்டும்

  - ஆனால் கீழ்கட்டமைப்புக்களில் **விலை/கட்டணம் அறவிடலாம்** எனவே அரசும் **தனியாரும்** வழங்கலாம் - செலவை ஈடு செய்யக்கூடிய அளவு **விலை/ வருமானம் பெறமுடியுமாயின்** தனியார் துறை கீழ்க்கட்டுமாணங்களை வழங்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் இவை "அரைகுறைப் பொதுப்பண்டம்" (Semi Public Good) அல்லது போலிப் பொதுப்பண்டம் (Quassi Public Good) எனப்படுகிறது

## பொருளாதாரக்கீழ் கட்டமைப்புக்களை அரசு வழங்குவதற்கான காரணம்

- இவற்றிற்குகட்டணம் அறவிடமுடியும் எனவே செலவை ஈடுசெய்யக்கூடிய அளவு விலை / வருமானம் பெறமுடியுமாயின் தனியார் துறை கீழ்க்கட்டமைப் புக்களை வழங்கமுடியும்.
- எனினும் அரசு வழங்க வேண்டியிருப்பதற்கான காரணம் **வெளிவாரி நன்மைகள்** காணப்படு வதனாலாகும்

## உட் கட்டமைப்பில் இலங்கை அரசின் பங்கு

- 1983 இன் இனமோதலைத்தொடர்ந்து உருவான வடகிழக்கில் அதிகரித்த இனமோதல்கள் காரணமாக ஏற்பட்ட **பாதுகாப்புச்செலவு அதிகரிப்பு** உட் கட்டமைப்பு மீதான அரச முதலீட்டை 1997 வரைகட்டுப்படுத்தியது

மொ. உ. உற்பத்தியில் அரசமுதலீடு
1985 – 13%
1997 –5%
1998 – 6%

- எனவே அரசு உட்கட்டமைப்பை விருத்தி செய்ய பின்வரும் **வழிமுறைகளைக்** கையாள்கின்றது.

1) தனியார் துறைப்பங்கேற்பு
2) அரசதொழில் முயற்சிகளின் சீராக்கத்தை விரைவுபடுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ கீழ் கட்டமைப்புக்களை வழங்குதவதில் **தனியார் துறையின் பங்களிப்பைப்பெற** அரசு பயன்படுத்தும் **இரு உத்திகள்/ உபாயங்கள்:**

1) **கட்டி தொழிற்படுத்தி உரிமைகொள்ளுதல்** (BOO)
2) **கட்டி தொழிற்படுத்தி உரிமைமாற்றுதல்** (BOT)

இவ் உத்திகள் மூலம் உள்நாட்டு வெளிநாட்டு தனியார் முதலீட்டாளரை இதில் ஈடுபடச்செய்யலாம்.

❖ இலங்கையில் உட்கட்டமைப்பு வசதிகளின் போதாமையினால் ஏற்பட்ட **பிரதான பாதிப்புக்கள்:**

1) இலங்கை **ஏற்றுமதிப்பொருட்களின்** வெளிநாட்டு **போட்டித்தன்மையைப்** பாதித்தது.
2) விரைவான பொருளாதார **வளர்ச்சிக்கு தடையாகியமை**
3) வெளிநாட்டு முதலீட்டை பாதித்தது

## உட்கட்டமைப்பும் - பொருளாதாரவளர்ச்சியும்

உட்கட்டமைப்புக்கள் மூலம்

- உற்பத்திச்செலவைக்குறைக்கலாம்
- நேரத்தைக் குறைக்கலாம்
- தனியார் துறையை ஊக்குவிக்கலாம்
- முதலீட்டைக்கவரலாம்
- உற்பத்தித்திறனை அதிகரிக்கலாம்

இவற்றினூடாக உற்பத்தி அதிகரித்து பொருளாதார வளர்ச்சி அபிவிருத்தி அடையப்படும்

## அபிவிருத்திக்கொள்கையில் - உட்கட்டமைப்புகளும், திறன்களும் :

❖ **உட்கட்டமைப்பு வசதிகள் மூலம்**

- உற்பத்திச் செலவைக்குறைக்கலாம்
- நேரத்தைக் குறைக்கலாம்
- தனியார் துறையை ஊக்குவிக்கலாம்
- முதலீட்டைக் கவரலாம்
- உற்பத்தித் திறனை அதிகரிக்கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றினூடாகஉற்பத்தி அதிகரித்து பொருளாதார வளர்ச்சி **அபிவிருத்தி** அடையப்படும்.

- ❖ **திறன்களை** அபிவிருத்தி செய்வதனூடாக
  - மனிதவள மூலதனத்தை அதிகரித்தல்
  - அதனூடாக ஊழிய உற்பத்தித்திறனை அதிகரித்தல்
  - பயிற்சிப்பட்ட ஊழியத்தின் மூலம் நவீன தொழில் நுட்பத்தை பயன்படுத்த முடிதல்

இவற்றினூடாக உற்பத்தி அதிகரித்து பொருளாதார **வளர்ச்சி அபிவிருத்தி** அடையப்படும்.

- ❖ எனவே தான் **இலங்கையின் அபிவிருத்திக் கொள்கையில் "உள்கட்டமைப்புகள் "திறன்கள்** ஆகியவற்றை விருத்தி செய்யும் முயற்சிகள் விசேடகவனத்தைப் பெறுதல் வேண்டும் எனக் கூறப்படுகின்றது.

## கடந்தகாலப்பரீட்சை வினாக்கள்

1. பொருளாதார அபிவிருத்தியில் உட்கட்டுமாணங்கள் என்ன பங்களிப்பினைச் செய்கின்றன?

   i) மனித மூலதனத்தின் வளர்ச்சிக்கு உதவுதல்.
   ii) உற்பத்தியில் சாதகமான வெளிவாரி விளைவுகளை ஏற்படுத்தல்
   iii) **உற்பத்தி நடவடிக்கைகள்** நாளாவித அடிப்படை வசதிகளினாலும் முன்னேற்றப்படுகின்றன.
   iv) **உற்பத்திச்செலவைக்குறைக்க** உதவுகிறது.

(1998புதிய – பகுதி I)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. வீதிகள், போக்குவரத்து, தொடர்பாடல், நீர்ப் பாசனம், வலு, துறைமுகங்கள், விமான நிலையங்கள் போன்றவற்றின் வசதிகளைப் பொருளியலாளர் தொகுத்து ........................... என அழைப்பர்

(விடை: பொருளாதாரக்கீழ்க்கட்டுமான வசதிகள்)

(1997புதிய – பகுதி I)

3. இலங்கையின் அபிவிருத்திக்கொள்கையில் உள் கட்டமைப்புகள், திறன்கள் ஆகியவற்றை விருத்தி செய்யும் முயற்சிகள் விசேட கவனத்தைப்பெறுதல் வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது. இதுபற்றி விளக்கிக் கருத்துரைக்கவும்.

(1997புதிய)

4. i) பொருளாதாரக்கீழ்கட்டுமாணங்கள் என்பன யாவை? அவற்றின் முக்கியத்துவம் யாது?
ii) கீழ்க்கட்டுமாணங்களைப்பொதுப்பண்டங்கள் எனக் கருத முடியுமா?
iii) கீழ்க்கட்டுமாணங்களை வழங்குவதில் தனியார் துறை பங்குபற்றமுடியுமா? அப்படியாயின் எவ்வாறு?

(1996)

5. பொருளாதாரக் கீழ்க்கட்டமைப்பு வசதிகளை வழங்குவது ஒரு அரசாங்கத்தின் மற்றுமொரு முக்கிய கடமைப்பாங்காகும்.

i) பொருளாதாரக் கீழ்க்கட்டமைப்பு வசதிகள் என்பதனால் கருதப்படுவது யாது?
ii) அவற்றின் முக்கியத்துவம் என்ன?
iii) அவை பொதுப்பண்டங்கள் என்றவகுதியினுள் அடங்குவதனாலேயா அவற்றை வழங்குவதில் அரசாங்கம் தலையிட வேண்டியுள்ளது?

(1994)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VIII

# கட்டமைப்புசார் சீராக்கலும் உலகமயமாக்கமும்

## A கட்டமைப்புச் சீராக்கல் நிகழ்ச்சித்திட்டம் (Structural Adjustment Programme - SAP)

(பொருளாதாரக்கட்டமைப்புச்சீராக்கங்கள் / அமைப்புச்சீராக்கங்கள்)

❖ வளர்முக நாடுகளில் அவதானிக்கப்பட்ட **பேரினப் பொருளியல் சமநிலையின்மைகளை** (விளக்கம் பின்பு) நீக்கும் முகமாக பிரிட்டன் வூட்ஸ் நிறுவனங்களான **உலகவங்கி, சர்வதேச நாணயநிதியம்** என்பவற்றால் 1980 **களின் ஆரம்பத்தில்** அறிமுகம் செய்யப்பட்ட கொள்கைகள் இவையாகும். – **இலங்கை** உட்பட பெரும்பாலான வளர்முக **நாடுகளில்** இக்கொள்கைகள் செயற்பட்டு வருகின்றன.

❖ அமைப்புச்சீராக்கல் நிகழ்ச்சித்திட்டங்கள் **உலக வங்கி** வழங்கும் **கொடு கடனை** குறிப்பிட்ட ஒரு நாட்டின் பொருளாதாரக் **கொள்கையுடனும், நிறுவனரீதியான மாற்றங்களுடனும் பிணைக்கின்றன.**

❖ அமைப்புச்சீராக்கத்தில் **அடங்கும் விடயங்கள்:**

1) அரச தலையீட்டை அகற்றுவதனூடாக **விலைப் பொறிமுறையைச்** சிறப்பாக இயங்குவதற்கான அடிப்படையை வழங்குதல்

- **பொருளாதாரத்தைத்** தாராண்மைப்படுத்தல்
- வெளிநாட்டு **வர்த்தகத்தைத் தாராண்மைப் படுத்தல்**

2. அரசமுயற்சிகளைத் **தனியார்மயப்படுத்தல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. அரச வரவு செலவுத் திட்டப்பற்றாக் குறைகளை குறைத்தல்
4. வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவித்தல்
5. நாணயமாற்றுவீதத்தின் மிகை மதிப்பீட்டினைத் தவிர்த்தல்- பேரினப்பொருளாதார உறுதிப்பாட்டினை ஏற்படுத்தல்.

## இதன் இலக்குகள்

1. பேரினப்பொருளியல் சமநிலையை ஏற்படுத்தல்.
2. முதலீட்டு மட்டத்தை அதிகரித்தல்.
3. அரச நிறுவனங்களின் திறனை மேம்படுத்தல்
4. நிலைத்திருக்கும் பொருளாதார வளர்ச்சி
5. சகல மக்களினதும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்
6. பொருளாதாரவாய்ப்புக்களை ஜனநாயகமாக்குதல்

### இதிலுள்ள பலமான அம்சம்

❖ பொருளாதார அபிவிருத்தியைத் துரிதப்படுத்தும்

### பலவீனமான அம்சங்கள்

1. பொருளாதார **சமத்துவமின்மை** அதிகரித்தல்
2. அரசின் **பொதுநலசெலவு** குறைதல்
3. **உள்நாட்டுத்தொழில்கள்** சில பாதிப்படையலாம்

## அமைப்புச்சீராக்கல் - இலங்கை அனுபவம்

### ❖ 1977 – 1988 முதல்காலகட்டம்:

இக்காலத்தில் சீர்திருத்தங்கள் ***பாரம்பரியத்தன்மை*** கொண்டவையாக அமைந்திருந்தன. அவையாவன

1. **செலாவணி வீதங்களை** ஒருமுப்படுத்தியமையும் - கணிசமான நாணயபெறுமதித்தேய்வும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அளவுக்கட்டுப்பாடுகளை நீக்கி தீர்வை முறைக்கு மாறியமை, தீர்வை வீதங்களைக்குறைத்தமை
- செலாவணிக்கட்டுப்பாடுகளை ஓரளவு தாராளமய மாக்கியமை.

2. நிதிச்சந்தையை ஓரளவு தாராளமயமாக்கியமை
   - வெளி நாட்டுவங்கிகளை இயங்க அனுமதித்தமை

3. விலைக்கட்டுப்பாடுகளை நீக்கி, சந்தைச் சக்திகளுக் கேற்ப மாறுவதற்கு இடமளிக்கப்பட்டமை

   - உணவு மானியம் நீக்கப்பட்டு உணவு முத்திரைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டமை

4. வெளிநாட்டு நேரடிமுதலீடு ஊக்குவிக்கப்பட்டமை
   - சுதந்திரவர்த்தகவலயம் தாபிக்கப்பட்டமை

❖ இவற்றினால் - கைத்தொழில் துறையை விரைவாக வளர்ச்சியடையச் செய்ய முடிய. வில்லை
- பொதுத்துறையில் திறமையின்மை நிலவியது.
- வருமான ஏற்றத்தாழ்வு அதிகரித்தது.

❖ 1989ன் பின்னரான இரண்டாவது கட்டம்.:

இப்பிரச்சினைகளுக்கு

1) பொதுத்துறை நிறுவனங்களின் செயற்திறனின்மை
2) நேரடி உற்பத்தித்துறைகளிலும், செலாவணி வீதத் தை மிகைப்பெறுமதியில் வைத்திருப்பதிலும் அரசின் தலையீடு போன்றன காரணம் என உலக வங்கி கூறியது. இதன்படி 2 வழிமுறைகள் எடுக்கப்பட்டன.

1) மேலும் தாராளமயப்படுத்தல் - மூலதனச்சந்தையை உயிரப்பித்தல் - வெளிநாட்டுமுதலீட்டை ஊக்கு வித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) வ. செ. தி. பற்றாக்குறையை குறைத்தல் இதற்கு 2 நடவடிக்கைகள்:

i) உயர்வட்டி நடவடிக்கைகள்
ii) தனியார் மயமாக்கல்

❖ உயர்வட்டிவீதக்கொள்கையால் உற்பத்திச்செலவு அதிகரித்தது

- தனியார் மயப்படுத்தப்பட்ட சில தொழில்கள் செயலிழந்தன எனவேதான் இன்று அவ் அரச தொழில் முயற்சிகள்சீரமைக்கப்பட்டு வருகின்றன.

❖ இலங்கையில் அமைப்புச் சீராக்கங்கள் வளர்ச்சியை ஏற்படுத்திய போதும் அபிவிருத்தியை ஏற்படுத்தத் தவறியுள்ளன எனலாம்

## பொருளாதார தாராண்மைப்படுத்தல்

❖ "வர்த்தகம் நாணயமாற்றுவீதம் விலைகள் சாதன ஒதுக்கீடுகள் போன்றவற்றில் காணப்படும் பல்வேறு கட்டுப்பாடுகளை அகற்றுவதன் மூலம் ஒரு மூடிய பொருளாதார அமைப்பினை திறந்த சந்தை முறைமைக்கு மாற்றுதல் பொருளாதார தாராண்மைப்படுத்தலாகும்"

❖ இதன் முக்கியத்துவம்

1) உற்பத்தித்திறனை அதிகரித்து பொருளாதார வளர்ச்சியை அடைதல்

2) ஏற்றுமதி இறக்குமதி வரிசெலுத்துவதன் மூலம் கட்டுப்பாடின்றி ஏற்றுமதி இறக்குமதி செய்யமுடிதல்

❖ இதன் பலவீனம்:

இது ஏற்றுமதி ஊக்குவிப்பிற்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் சாதகமாக இருப்பினும் பின்வரும் பாதக விளைவுகள் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) வருமானப்பங்கீட்டிற்கு சாதகமானதன்று வருமான ஏற்றத்தாழ்வை அதிகரிக்கச்செய்யும்

2) உள்நாட்டுத்தொழில்கள் சில பாதிப்படையலாம்.

❖ கட்டுப்படுத்தியதைவிட தாராள அமைப்பு சிறந்ததாகும்.

# பேரினப்பொருளியல் சமநிலையின்மை

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் பல, குறிப்பிடத்தக்க பேரினப்பொருளியற் சமநிலையின்மையினால் பாதிக்கப் படுகின்றன. பேரினப்பொருளியற் சமநிலையின்மை என்பதன் கீழ் உள்ளடக்கும் **விடயங்கள்:**

1. உயர்பணவீக்கம்
2. பாரிய வரவுசெலவுத்திட்டக் குறைநிலைகள்
3. சென்மதிநிலுவைக் குறைநிலைகள்
   சென்மதிநிலுவை நடப்புக்கணக்கில பாரிய குறை நிலைகள்
4. உண்மையிலும் கூடியமிகைப்பெறுமானத்தைக் கொண்ட நாணயமாற்றுவீதம்
5. எதிர்க்கணிய மெய்வட்டிவிதங்கள்
6. உயர்வேலையின்மை
7. பொருளாதார வீழ்ச்சி
8. வருமான சமமின்மை

வளர்முகநாடுகளில் இத்தகைய பேரினப்பொருளியல் சமநிலையின்மையை **நீக்குமுகமாக;**

❖ **ச. நா. நிதியம்** (IMF) – **உறுதிப்படுத்தல்** நிகழ்ச்சித் திட்டத்தையும் (Stablisation programme) (குறுங்கால அடிப்படையானது)

❖ உலகவங்கி (WB) **அமைப்புச்சீராக்கல்** நிகழ்ச்சித் திட்டத்தையும் (SAP) (நீண்டகால அடிப்படையானது) மேற்கொள்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8 தனியார் மயமாக்கல் (Privatisation)

- தனியார் மயமாக்கல் அல்லது மக்கள் மயப்படுத்தல் என்பது **தேசியமயமாக்கும் கொள்கைக்கு** நேரெதிரானதாகும்.
- "**அரசாங்கத்திற்கு** அல்லது **அரசசார் நிறுவனங்களுக்குச்** சொந்தமான **ஆதனங்களையோ** அல்லது **தொழில் நிறுவனங்களையோ** அல்லது அவற்றின் ஒரு **பகுதியையோ** தனியார்துறை **உடைமையாகமாக்குதல்** அல்லது தனியார்துறை **முகாமைக்குட்படுத்தல்** தனியார் மயப்படுத்தல் எனப்படும்"
- தனியார்மயப்படுத்தல் **முறைகள்/விதங்கள்:**

1. **முழுமையாகவோ** அல்லது **பெரும் பங்கிலையோ** தனியார் துறைக்கு விற்பனை செய்தல்
2. அரசாங்க உரிமையில் மாற்றங்களைப் புகுத்தாது, **முகாமைத்துவத்தை மட்டும்** தனியார் துறைக்கு விற்பனை செய்தல்
3. **நீண்டகாலக்குத்தகைக்கு** வழங்குதல்

(தனியார் மயமாக்கல் வகைகள் நாடுகளுக்கு நாடு வேறுபடும்)

- **மக்கள் மயமாக்கல்** என்பது அரசாங்க நிறுவனங்கள் அவற்றின் **பங்குகளில் 10% தை** அந் நிறுவனங்களின் **ஊழியர்களுக்கு** ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனை களுக்குட்பட்டு தனியார் துறைக்கு விற்றலைக் குறிக்கும்.
- ஐக்கியராச்சியத்தில் தனியார்மயப்படுத்தல் மூலம் அடையப்பட்ட முன்னேற்றங்களின் பின்னர் **1980களில்** பலநாடுகளில் பின்பற்றப்பட்டு வருகிறது. **1987ல்** இலங்கையில் தனியார் மயப்படுத்தும் **கொள்கை** அரசினால் அறிவிக்கப்பட்டது. 1989ன் **பின்னர்** பல பெருந்தோட்டங்கள் உட்பட அரச தொழில் முயற்சிகள் தனியார் மயமாக்கப்பட்டன. **அமைப்புச்சீராக்கல்** வழி முறைகளில் ஒன்றாக இது அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ தனியார் மயப்படுத்துவதற்கான காரணங்கள்

1. **சந்தையை** அடிப்படையாகக்கொண்ட பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்தல்

2. **அரச கூட்டுத்தாபனங்கள் வினைத்திறனற்ற** நிலையில் காணப்பட்டதும், தொடர்ந்து நட்டமடைதலும் உற்பத்தித்தரம் **வேகம்** குறைவாக இருந்தமை.

3. அரசாங்கத்தின் பொருளாதாரக்**கடமைகள் பற்றிய** புதிய **சிந்தனைகள்** தோற்றம்பெறல்

உ+ம் வர்த்தக நடவடிக்கைகளிலிருந்து அரசாங்கம் இயலுமான அளவில் விலகியிருத்தல்.

❖ தனியார் மயப்படுத்தலின் *குறிக்கோள்கள்*

1. **வினைத்திறனையும் உற்பத்தியாற்றலையும்** அதிகரித்தல்
2. **நிதியாற்றலையும் இலாபத்தன்மை**யையும் மேம்படுத்தல்
3. கூடுதலான முதலீடுகளைக்கவர்வதன் மூலம் உற்பத்தித் தரத்தினை மேம்படுத்தி, **நிரம்பலை** அதிகரித்தல்.
4. புதிய முதலீடுகளைப் பயன்படுத்தி **இயலளவையும்**, தொழில் வாய்ப்பையும் அதிகரித்தல்
5. வரவுசெலவுத் திட்டத்தின் மீதான **சுமையைக்** குறைத்தல்)

❖ இதன் அனுகூலங்கள் / சார்பான வாதங்கள்

1. அரசாங்க முகாமையின் கீழ் **திறமையின்மை** – அரசியல் தலையீடும் தன்னிச்சையான **தீர்மானங்களை** மேற்கொள்ள முடியாமையும் - **திறனை இலாபத்தை** உயர்த்த உதவும்.

2. இந்நிறுவனங்களின் நட்டம் காரணமாக **வரவு செலவுத் திட்டத்தின் மீது** அவை ஏற்படுத்தும் தாக்கம் / **சுமையைக்குறைக்கலாம்** (விளக்கம்பின்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. **தனியார் முதலீட்டை** ஊக்குவித்தல், (உள்நாட்டு, வெளிநாட்டு முதலீடு)

4. வர்த்தக நடவடிக்கையிலிருந்து **அரசாங்கம் விலகவேண்டும்** என்றவாதம்

5. **ஊழியர்கள் பங்குதாரர்** ஆகுதல் - **தொழில் வாய்ப்புக்கள்** பெருகலாம். உ+ம் ஒட்சிசன், துல்கிரிய புடவைஆலை

❖ இதன் ***பிரதிகூலங்கள்/எதிரான வாதங்கள்:***

1. **பொருளாதார, சமூகநலன்களைப் பாதுகாப்பதற்கு** முக்கிய துறைகள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருத்தல் அவசியம் - தனியார் இலாபத்தினை நோக்காக கொள்வதால் இவற்றை பாதுகாக்க முடியாது.

2. **வேலைவாய்ப்புக்களைக் குறைத்தல்** கூடும்.

3. முகாமைத்**திறனை** உயர்த்துவதற்கு தனியார் மயமாக்கல் கட்டாயமல்ல – அவற்றை அரசகட்டுப்பாடுகளின்ினும் விடுவித்து **வர்த்தகரீதியில் செயற்படுத்துவதன் மூலம்** இதனைச் சாதிக்கமுடியும்

❖ தனியார் **மயப்படுத்தல் மூலம்** ***அரசவரவு செலவுத் திட்டத்தில் ஏற்படும் முன்னேற்றங்கள்:***

1. **விற்பனைப்பெறுகைகள்** அரசின் **வருமானங்களை** அதிகரித்தல்

2. அரசதொழில் முயற்சிகளுக்கான **மாற்றல்கள்** குறைதல்

3. அரச படுகடனில் **ஒரு பகுதி மீளச்** செலுத்தப்படுதல்
   - படுகடன் **வீதம்** குறைதல்
   - இது **வட்டிக்கொடுப்பனவைக்** குறைத்தல்.

4. தனியார் மயப்படுத்தப்பட்ட தொழில் முயற்சிகள் மூலம் **வரிவருமானம் பெறல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. வ.செ. திட்டத்தின் விளைவான பணவீக்கத்தாக்கம் குறைதல்

❖ தனியார் மயப்படுத்தப்பட்ட நிறுவனங்கள்:

1வது கட்டம் : புடவை ஆலைகள் (வியங்கொட, துல்கிரிய, பூகொட)
-இலங்கை ஒட்சிசன், லங்கலோகவன் கலம்

2வது கட்டம் :- இலங்கை வடிசாலைகள், றுகுணு சீமெந்து, லங்கா மில்க்பூட்ஸ் - பெருந்தோட்டக் கம்பனிகளின் முகாமைத்துவம்

3வது கட்டம் (1994ன்பின்): கொழும்பு வாயு, இலங்கை ரெலிகொம், பெருந்தோட்டக் கம்பனிகள் போன்ற பாரிய முயற்சிகள்

## C பொருளாதார உலகமயப்படுத்தல் (Economic Globalisation) (கோளமயமாதல்)

❖ **கடந்த மூன்று தசாப்தங்களாக** உலக பொருளாதாரத்தில் இடம்பெற்றுவரும் முக்கியபரிணாமவளர்ச்சியாக உலகமயமாக்கல் விளங்குகிறது

- **தேசியபொருளாதாரங்களை உலகசந்தையுடன் இணைக்கும் ஒரு நடவடிக்கையாக** உலகமயமாக்கல் விளங்குகிறது.
- **"தேசிய அடிப்படையிலான** உற்பத்தி, வர்த்தகம், முதலீடு தொழிநுட்பம், தொடர்பாடல் என்ற மரபுரீதியிலான செயன்முறைகளுக்கு **மாறாக உலக உற்பத்தி, உலகவர்த்தகம், உலகமுதலீடு, உலக தொழில்நுட்பம், உலகதொடர்பாடல்** என்ற ரீதியில் **உலகளாவிய பொருளாதார முறையொன்று உருவாகிவருதல்** உலகமயமாக்கம் எனலாம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளிடையே வர்த்தகம், முதலீடு குறித்து கூடிய தொடர்புகளையும், ஒருங்கிணைப்பையும் ஏற்படுத்துவதாக உலக மயமாக்கல் விளங்குகின்றது.

❖ அபிவிருத்திக்கான கொள்கையாக உலகமயமாக்கம் முன்வைக்கப்பட்டுள்ளது. தாராளக்கொள்கையின் ஒரு பிரதான அம்சமாக அண்மைக்காலத்தில் நாடுகள் கூடியளவிற்கு வர்த்தகம் முதலோட்டம், தொழில்நுட்பம், தொடர்பாடல் ஆகியவற்றின் அடிப்படையில் ஒருங்கிணைந்த போக்கினைக் கடைப்பிடித்துவருகின்றன.

- குறிப்பாக வளர்முகநாடுகளில் வேலையின்மை, வறுமை, வருமான சமமின்மை, பணவீக்கம் போன்ற பிரச்சினைகள் தேசிய பொருளாதாரத்தின் விரைவான அபிவிருத்திக்குச் சவாலாக உள்ளன. இப்பொருளாதார நெருக்கடிகளிலிருந்து விடுபடுவதற்கும், மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும் உலகமயமாக்கலே சிறந்ததீர்வாக இருக்கமுடியும் என்ற அடிப்படையில் இலங்கை உட்பட வளர்முக நாடுகள் கடந்த மூன்று தசாப்தங்களாக பாரியசீரதிருத்தங்களை மேற்கொண்டு வருகின்றன.

❖ உலகமயமாக்கலுக்கான *காரணிகள்:*

1. உலகரீதியான பல்தேசியக்கம்பனிகளின் ஆதிக்கம்: (Multinational corporation)

- இவை உலகரீதியில் கிடையாகவும், குத்தாகவும் ஒருங்கிணைந்து உலக தொழிற்சாலைகளாக (GlobalFactaries) உருவாகியுள்ளன.

- இக்கூட்டிணைந்த நிறுவனங்கள் மேலதிக உற்பத்திகளை இல்லாதொழித்தல், உற்பத்திச் செலவைக்குறைத்தல், ஊழியர் எண்ணிக்கையைக் குறைத்தல், மூலம் போட்டித்தன்மை பேணுதல், அரசுகளை நிர்ப்பந்திப்பதன்மூலம் தமது பேரளவு உற்பத்திப்பண்டங்களுக்கு சந்தையைத் திறந்து விடல் போன்ற உபாயங்களினூடாக உலகப் பொருளாதாரத்தில் ஆதிக்கம் செலுத்துகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கில் ஐரோப்பா அமெரிக்க பல்தேசியக் கம்பனிகளும் கிழக்கில் யப்பானியப்பல்தேசியக் கம்பனிகளும் ஆதிக்கம் செலுத்துகின்றன. இந்த மேலாதிக்க போட்டியின் விளைவுதான் 2ம் உலகயுத்தத்திற்குப்பின் 2வது முறையாக ஏற்பட்டுள்ள **டொலருக்கும் யென்னுக்குமான** பனிப்போர் (Cold war) ஆகும்.

2. **நவீன தொழிநுட்பக்கண்டுபிடிப்புக்கள்:**

- மிகவிரைவான தொடர்பாடல்முறை, குறைந்தளவான போக்குவரத்துச்செலவுகள், வளர்ச்சியடைந்துள்ள கணனி மயப்படுத்தல், சர்வதேச வலைப்பின்னல் முறை(Internet) போன்றவற்றின் வளர்சசி.

3. **சர்வதேச நாணயநிதியம்**(IMF) **உலகவங்கி** (WB) **உலக வர்த்தக அமைப்பு**(WTO) என்பவற்றின் செயற்பாடுகள்

- இவை உலக நாடுகள் மீது அவற்றின் தேசியவாதப் பொருளாதாரக் கொள்கைக்குச் சவால்விடும் வகையில் உலக பொருளாதாரத்துடன் இணைந்து கொள்ளச் செய்யும் **அமைப்புச் சீராக்கங்கள்** (SAP) செய்யுமாறு நிர்ப்பந்தித்துள்ளன.
- **இலங்கையில் 1977 இல் இருந்து** மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சீரதிருத்தங்கள் இததகையன (அமைப்புச் சீராக்கலில் உள்ள அம்சங்களைக் குறிப்பிடுக)

4. **அரசின் தலையீடு குறைந்தமை.**

- வளர்முகநாட்டு அரசுகள் வர்த்தகம் முதலீடு தொடர்பான தலையீடுகளைக் குறைத்து தனியாரை ஊக்குவித்தமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ உலகமயமாக்கும் செயற்பாடு பின்வரும் **நிலைமைகளூடாக** அடையப்படுகிறது:

i) ஏற்றுமதி இறக்குமதி தாராளமயமாக்கல்

ii) சந்தைமயமான பொருளாதார முறையை முழு அளவில் அனுமதித்தல்

iii) தனியார் மயமாக்கலுடன் கூடிய பொருளாதார சீர்திருத்தத்தை மேற் கொள்ளல்

iv) உள்நாட்டு முதலீட்டு சந்தையைச் சர்வதேச சந்தையுடன் ஒன்றிணைத்தல்

❖ இலங்கை மாத்திரமன்றி **அனைத்து உலக நாடுகளும்** இத்தகைய புதிய பொருளாதாரச் சீரமைப்புக்களைச் செய்து கொண்டிருப்பதால் தேசிய பொருளாதாரம் என்ற நிலமையிலிருந்து விடுபட்டு **புதிய உலகப் பொருளாதார முறைமையொன்றினை** நோக்கி படிப்படியாக நகர்ந்து கொண்டிருக்கிறது இதுவே உலகமயமாக்கல் எனப்படுகிறது.

## வளர்முக நாடுகளில் ஏற்படுத்தும் பாதிப்பு

❖ இலங்கை போன்ற அபிவிருத்தி அடைகின்ற நாடுகள் இவ்வுலமயப்படுத்தலின் **அங்கமாக மாறி**, அவற்றின் வர்த்தகம், முதலீடுகள், தொழில்நுட்பம், தொடர்பாடல் என்பன பெருமளவிற்கு **உலகபொருளாதாரத்துடன்** தொடர்பு படுத்தப்பட்டுள்ளன.

❖ **பன்னாட்டுக்கம்பனிகளின்** செல்வாக்கும் இந்நாடுகளில் **அதிகரித்து வருகின்றன.** உ+ம் கொக்கோ கோலா (Coco Coala) பெப்சிக்கோலோ (Pepsiey Coala), பாட்டா(Bata), சிற்றி வங்கி(City Bank) டுபேக்கோ (Tobacco) எவடி (Eveready)டொயோட்டா ( ɔyeta ) நிசான்(Nishan) ஹொண்டோ (Honda) யமஹாகா (Yamaha) சோனி (Sony) நேஷனல் (National), கொடைக் (Codack)பியுஜி (Fuji) - இவை இன்று உலகப்பொருளாதாரத்தின் பெரும்பங்கை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயன்கள் / அனுகூலங்கள்

இத்தகைய உலகமயப்படுத்தப்பட்ட பொருளாதார சூழ் நிலையில் இலங்கைபோன்ற அபிவிருத்தியடைகின்ற நாடுகள் பெறக்கூடிய பயன்களாவன;

1. அதிகளவு **வெளிநாட்டு முதலீடுகளைப்** பெறுதல்
2. வெளிநாட்டு முதலீடுகள் பல்தேசியக்கம்பனிகளுடாக அதிகரிப்பதனால் நவீன **தொழிநுட்ப மாற்றங்கள்** ஏற்படுதல்
3. **தரமானபொருட்களை** பெறமுடிதல்
4. ஊழியநகர்வுக்கான தடைகள் நீக்கப்பட்டால் **வேலை யின்மை குறையவாய்ப்புண்டு**

## சவால்கள் / அறைகூவல்கள்/ பிரதிகூலங்கள்

உலகமயப்படுத்தப்பட்ட பொருளாதார சூழ்நிலையில் **அபி விருத்தியடைந்து** வரும் **நாடுகள்** பின்வரும் சவால்களை எதிர்நோக்குகின்றன.

1. பொருளாததாரங்கள் ஒன்றிலொன்று **தங்கியிருத்தலும்** அதனால் ஏற்படும் **புலவீனங்களும்.**

   உ+ம் - தனித்துவம் இழக்கப்படல்

   - சர்வதேச நிதிச்சந்தைகளில் நிச்சயமற்ற தன்மை யினால் ஆபத்தின் அளவு அதிகரிக்கின்றது.
   - குறைந்த தரமுடைய தொழில் நுட்பத்தைக்கொண்ட நாடுகள் உலக சந்தையை அடைய முடியா திருத்தல்

2. **பல்தேசியக் கம்பனிகளின் ஆதிக்கம்** வர்த்தகம், முதலீடு, தொழிநுட்பம், தகவல் தொடர்பு என்பவற்றில் அதிகரித்தல்

   - இவை தேசிய பொருளாதாரங்களின் உள்ளார்த்த **விரிவாக்கத்திற்குத் தடையாக** உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. **வருமான ஏற்றத்தாழ்வு அதிகரிக்கின்றது.**

உலகமயமாக்கல் செல்வந்தரை மேலும் செல்வந்தோராகவும் வறியோரை மேலும் வறியோராகவும் ஆக்கியுள்ளது.

- பிராந்திய பொருளாதாரக் குழுக்களுக்குள் அடங்காத தனிப்பட்ட நாடுகளில் **வறுமை அதிகரிக்கின்றது.**
உ+ம் 1990களில் சந்தை முறைக்குமாறி உலகமயப்படுத்தலுக்குட்பட்ட கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் புதிய வறுமை உருவாகியுள்ளது.

4. தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியினால் நாடுகளிடையேயான சமமின்மை தெரிய வாய்ப்புண்டு - இதனால் தெற்கிலிருந்து கைத்தொழில் மயமான வடக்கிற்கு **சட்டத்திற்கு புறம்பான சர்வதேச உழைப்பாளர் இடம் பெயர்வை** அதிகரிக்கும்

❖ விரைவாக ஏற்பட்டுள்ள உலகமமாக்கலிலிருந்து அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் **விலகிக் கொள்ளல் கஷ்டமாக** உள்ளது. **சேர்ந்து செயற்படுதலும் பல பிரச்சினைகளை** எதிர்நோக்குகின்றன.

## கடந்தகாலப்பரீட்சை வினாக்கள்

1. **கட்டமைப்புச்சீராக்கல்** கொள்கைகள் எனப்படுபவை யாவை?
இக்கொள்கையின் பலமான அம்சங்களும், பலவீனங்களும் யாவை?

(1997புதிய)

2. பொருளாதாரக் கட்டமைப்புச் சீராக்கங்கள் பற்றி விளக்கிக் கருத்துரைக்கவும்.

(1997 புதிய)

3. பொருளாதார வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்குமான பலம்வாய்ந்த ஓர் அடிப்படையை உருவாக்குவதற்கு 'கட்டமைப்புசார் சீராக்கல் நிகழ்ச்சித்திட்டங்களை' மேற்கொள்ளுமாறு அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் பெரும்பாலும் கேட்கப்படுகின்றன."கட்டமைப்புசார் சீராக்கங்கள்" என்பதன்கீழ் நீர் எவற்றை உள்ளடக்குவீர்?

(1995)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. 'பொருளாதார தாராண்மைப்படுத்தல்' என்ற எண்ணக் கருவை விளக்கிக் கருத்துரைக்கவும் (1993)

❖ அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் பல குறிப்பிடத்தக்க பேரினப்பொருளியல்சமநிலையின்மையினால் பாதிக்கப்படு கின்றன. என அடிக்கடி கூறப்படுகிறது. **"பேரினப் பொருளியற் சமநிலையின்மை"** என்பதன் கீழ் நீர் எவற்றை உள்ளடக்குவீர்?

5. அரசநிறுவனங்களை **தனியார் மயப்படுத்தியமை** இலங்கை அரசினது பாதீட்டுச் செயற்பாட்டில் என்ன தாக்கத்தினை ஏற்படுத்தியது? (1998பழைய)

6. இலங்கையில் அரசபெருந்தோட்டங்களைத் தனியார் மயமாக்கப்படுதலுக்குச் சார்பாகவும், எதிராகவும் விவாதிக்க. (1995)

7. அரசிற்கு உடமையான் தாபனங்கள் தனியார் மயமாக்கப்படுவதை ஆதரித்தும் எதிர்த்தும் விவா திக்குக (1995)

8. மக்கள் மயமாக்கலுக்குச் சார்பாகவும் எதிராகவும் உமது விவாதங்களைத் தருக. (1990 விசேட)

9. i) பொருளியல் பரப்பில் **உலகமயப்படுத்தல்** என்பதனால் விளங்கப்படுவது யாது?

   ii) இலங்கையைப்போன்ற அபிவிருத்தி அடைகின்ற நாடுகளில் இச்செயற்பாடு எத்தகைய பாதிப் பினை ஏற்படுத்துகின்றது? இத்தகைய உலக மயப்படுத்தப்பட்ட பொருளாதார சூழ்நிலையில் அபிவிருத்தி யடைகின்ற நாடுகள் பெறக்கூடிய பயன்கள் பற்றியும், எதிர்நோக்க வேண்டிய சவால்கள் பற்றியும் பரசீலிக்குக. (1998)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

IX

## இலங்கையில் சுதந்திரத்தின் பின்னரான அபிவிருத்திக் கொள்கைகளின் முக்கிய அம்சங்கள்:

1. **சமூகநல அபிவிருத்தியில்** கூடிய அக்கறை காட்டியமை:

- **உணவுப்போசாக்கும், கல்வியும் சுகாதார மருத்துவசதிகளும்** போன்றவற்றை அபிவிருத்தி செய்வதற்கு முன்னுரிமையளிக்கப்பட்டது. அரசவளங்களைச் செலவிடும் போது, இத்துறைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது.

உ+ம்:- - உணவுப்பங்கீட்டுத்திட்டம் - உணவுமுத்திரை
- இலவசக்கல்வி
- இலவச சுகாதார மருத்துவவசதி

இவற்றின் காரணமாக **சமூகநலக்குறிகாட்டிகளில்** முன்னேற்றம் ஏற்பட்டது உ+ம்

| குறிகாட்டிகள் | 1948 | 1998 |
|---|---|---|
| சராசரி ஆயுட்காலம் | 45 | 73 |
| கல்வியறிவு வீதம் | 60 | 92 |
| சிசுமரண வீதம் (1000 இற்கு) | 140 | 17 |
| இறப்பு வீதம் (1000 இற்கு) | 30 | 06 |
| பிறப்பு வீதம் (1000 இற்கு) | 37 | 18 |

2. **உள்நாட்டு விவசாய அபிவிருத்தியில்** அக்கறை காட்டியமை

- விசேடமாக நெல்லையும் ஏனைய உபஉணவுப் பயிர்ச்செய்கையையும் முன்னேற்றுவதன் மூலம் சுய தேவையைப் பூர்த்தியை அடைய முயற்சி செய்தமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ_+ம் - நீர்ப்பாசனம், காணி அபிவிருத்தி, குடியேற்றம், கடன்வசதி, விவசாய விரிவாக்கவசதி, விருத்தியடைந்த பயிரச் செய்கை முறைகளை அறிமுகம் செய்தமை, உத்தரவாதவிலைத்திட்டம் என்பவற்றின்மூலம் இக்கொள்கை நடைமுறைப்படுத்தப் பட்டதுஇதன் விளைவாக இலங்கை அரிசியும், உடைவு தொடர்பாக **சுயதேவைப்பூர்த்தி** அடைந்தமை.

3. **கைத்தொழில் அபிவிருத்தியில்** அக்கறை காட்டியமை

- **1960களில் இறக்குமதிப்பதிலீட்டு** முறையுடன் ஆரம்பிக்கப்பட்ட கைத்தொழில் மயமாக்கும்,
- **1977ன் பின் ஏற்றுமதி நோக்கிய** கைத்தொழில் மயமாக்கொள்கையாக விரிவுபடுத்தப்பட்டது.

4. அபிவிருத்திச் செயற்பாட்டில் அரச **தலையீட்டின் தன்மை மாற்றமடைதல்:**
அரசு அபிவிருத்திச் செயற்பாடுகளில் பிரதான காரணியாகச் செயற்பட்ட நிலை மாற்றப்பட்டது. இதற்கான **காரணங்கள்:**

i) சந்தைச்செயற்பாட்டிற்கு முதன்மையளித்தலும், **நேரடிக்கட்டுப்பாட்டு முறையிலிருந்து சந்தைமுறைக்கு மாற்றமடைதலும்**

ii) அரச வணிகமுயற்சிகளைத் **தனியார் மயப்படுத்தல்**

iii) பொருளாதாரம் **திறந்து விடப்பட்டது;**

- வெளிநாடுகள் உள்நாட்டில் **முதலிடுவதற்கான** சுதந்திரம் வழங்கப்பட்டது.
- **வெளிநாட்டு வங்கிகள்** உள்நாட்டில் கிளைகளைத்திறந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **1994 இன்பின்**

- இறக்குமதி வர்த்தகம், பொருள் விநியோகம் என்பவற்றில் அரசின் தலையீடு காணப்படுகிறது. உ-ம்: கூ.மொ.வி.தி
- **தெற்காசிய முன்னுரிமை வர்த்தக நாடுகளிலிருந்து பொருள் இறக்குமதி** செய்யப்படுகின்றன.

**வினா :**

1977 இன் பின்பு இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக் கொள்கைகள் மாற்றமடைந்த விதத்தினைச் சுருக்கமாக விளக்குக.

## இலங்கையின் வருமானப்பங்கீடு :

| சனத்தொகையின் சதவீதம் | வருமானத்தின் சதவீதம் | |
|---|---|---|
| | 1987 | 1997 |
| உயர்ந்த செல்வந்த 20%னர் | 57% | 53% |
| மிக மிக வறிய 40%னர் | 11% | 13% |

1987 - 1997 காலப்பகுதியில் வருமானப் பங்கீட்டில் முன்னேற்றம் காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசாத்துணைகள் - References


1. Economic Development
   - Michael P. Todaro – (1998)P.446 –668
2. Economic Explained
   - Maunder, Myers, Wall, Miller(1997) p.517 – 545

3. A Level Economics.
   - Sue Grant & Richard Young(1996) P.242 – 256

4. Modern Economics
   - H.L Ahuja (1997) Part VI P. 347 – 472
5. An Introduction to Modern Economics
   - Philip Hard wick, Bahadur khan, John Langmead (1996) P 444 – 598

6. Introductory Economics
   - Barry Harrison, Charles smith and Brinley Davies (1992) P. 373 – 386

7. Public Investment (1996 – 2000)
   - Department of National planing

8. 40th Anniversary Commemorative Volume of the Central Bank of Srilanka (1950 – 1990)

9. இன்றைய உலகம் - "உலகமயமாக்கலும் குறைவிருத்தி நாடுகளும்" - திரு. ப. சிவநாதன் (1999) பக். 52 – 55

10. பொருளியல் கோட்பாடு கொள்கைகள் பிரச்சினைகள் - திரு. இ. நந்தகுமாரன் பக். 32 – 42




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. இலங்கைப்பொருளாதாரம் - திரு. S. வரதராஜன்(1995)

12. இலங்கைப்பொருளாதாரம் - திரு. மா.லோகசிங்கம் (1997) பக். 69 – 118

13. வரவுசெலவுத்திட்ட உரை – 1999

14. கற்றல் கற்பித்தல் வழிகாட்டி. க.பொ.த உயர்தரம், பொருளியல் பகுதி II – தேசியகல்வி நிறுவக வெளியீடு (1997) பக். 98 – 114

15. சுதந்திர இலங்கையின் பொருளாதார முன்னேற்றம் - இலங்கை மத்திய வங்கி(1998)

16. இலங்கை மத்தியவங்கி ஆண்டறிக்கைகள் 1980 – 1998

17. பொருளாதாரக் கொள்கைகள் - மார்கா நிறுவனம் (1995)

18. பொருளியற்சிந்தனைககள் - மார்கா நிறுவனம்(1996)

19. அபிவிருத்தி மாதிரிகள் - மார்கா நிறுவனம் (1995)

20. கிழக்கு ஆசியாவின் அற்புதம் - மார்கா நிறுவனம்(1995)

21. இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் திட்டமிடல் செய்முறைற - மார்கா நிறுவனம் (1994)

22. பொருளியல் நோக்குகள் - மக்கள் வங்கி

23. புள்ளியிடத்திட்டங்கள் - இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் 1980 – 1998

24. தினக்குரல் "வாரவித்தியாரம்" பொருளாதார உலகமயமாக்கல்" திரு. S.H.M நவ்பல்(24.07.1998) பக். 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின் பொருளாதாரக் குறிகாட்டிகள் ( 1998)

| | |
|---|---|
| பொருளாதார வளர்ச்சி வீதம் | 4.7 |
| கல்வி கற்றோர் வீதம் | 92 |
| சிசுமரண வீதம் | 17 |
| ஆயுள் எதிர்பார்க்கை | 73 |
| தொழிலற்றோர்வீதம் | 9 |
| சனத்தொகை வளர்ச்சிவீதம் | 1.2 |
| வெளிநாட்டுக் கடன்சேவை வீதம் | 13 |
| உள்நாட்டுச் சேமிப்புவீதம் | 19 |
| தேசிய சேமிப்பு வீதம் | 23 |
| முதலீட்டு சேமிப்பு வீதம் | 25 |
| வெளிநாட்டுச் சொத்து (இறக்குமதி மாதங்களில்) | 6 |
| பணவீக்கவீதம் | 9 |
| பிறப்புவீதம் | 18 |
| இறப்பு வீதம் | 6 |
| தொழிற்படைப்பங்களிப்பு வீதம் | 52 |


அங்கை

கொம்பியூட்டர் & பிறின்ட்

கங்கை றோணியோ
(பிறவுன் வீதிக்கு அருகாமையில்)
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகலாசா மருந்தகம்
221, காவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரது நூல்கள்

1. பேரினப் பொருளாதாரம்
2. வெளிவாரி விளைவுகள்
3. சர்வதேச வர்த்தகம்
4. வர்த்தக மாற்றுவீதம்
5. அபிவிருத்திக் கொள்கைகள்

கிடைக்குமிடங்கள்:

★ பூபாலசிங்கம் புத்தகசாலை

★ ஸ்ரீலங்கா புத்தகசாலை
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org